# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வியாபாரப் பெயர்கள் சட்டம்

---

*[1987, பெப்ரவரி மாதம் 09 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1987, பெப்ரவரி மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

---

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*விலை : ரூபா 2.70* *தபாற் செலவு : ரூபா 2.30*

[1987 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 2/82

**வியாபாரப் பெயர்கள் தொடர்பான சட்டத்தைத் திருத்துவதற்கும் திரட்டுவதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வியாபாரப் பெயர்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறுன ("நியமிக்கப்பட்ட தேதி" என இதனகத்துப்பின்னர் குறிப்பிடுசெய்யப் படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

## பாகம் I

### வியாபாரப் பெயர்களின் பதிவுக்கான தேவைப்பாடுகள்

2. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக— குழுமங்களும் ஆட்களும் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது.

(அ) இலங்கையில் வியாபார இடமொன்றைக் கொண்டிருப்பதும், தனியாட்களாக இருக்கும் பங்காளர்கள் எல்லோரினதும் உண்மையான முழுப்பெயர்களையும் அத்துடன் கூட்டுத்தாபனங்களாக இருக்கும் பங்காளர்கள் எல்லாரினதும் கூட்டிணைக்கப்பட்ட பெயர்களையும், கொண்டிராத வியாபாரப் பெயரொன்றின்கீழ், மேலதிகச் சேர்க்கை ஏதேனுமின்றி, வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்றதுமான குழுமம் ஒவ்வொன்றும் ;

(ஆ) இலங்கையில் வியாபார இடமொன்றைக் கொண்டிருப்பவரும், அவரது உண்மையான முழுப்பெயரையும் கொண்டிராத வியாபாரப் பெயரொன்றின்கீழ், மேலதிகச் சேர்க்கை ஏதேனுமின்றி, வியாபாரத்தைக் கொண்டுநடாத்துபவருமான தனியாள் ஒவ்வொருவரும் ;

(இ) எந்தத் தனியாள் அல்லது அதன் எந்த உறுப்பினர், இலங்கையில் வியாபார இடமொன்றைக் கொண்டிருந்து, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னராயினுஞ்சரி, அல்லது பின்னராயினுஞ்சரி, பெயரை மாற்றிக்கொண்டாரோ (பெண்ணொருத்தியின் விடயத்தில் திருமணத்தின் விளைவாக ஏற்படும் பெயர்மாற்றம் தவிர) அந்தத் தனியாள் ஒவ்வொருவரும் அல்லது அந்த உறுப்பினரொருவரைக்கொண்ட குழுமம் ஒவ்வொன்றும் ; அத்துடன்

(ஈ) இலங்கையில் வியாபார இடமொன்றைக் கொண்டிருப்பதும், அதனது உண்மையான கூட்டிணைப்புப் பெயரைக்கொண்டிராத வியாபாரப் பெயரொன்றின்கீழ், மேலதிகச் சேர்க்கை ஏதேனுமின்றி, வியாபாரத்தைக் கொண்டுநடாத்துகின்றதுமான கூட்டுத்தாபனம் ஒவ்வொன்றும்,

இச்சட்டத்தினால் பணிக்கப்படும் விதத்தில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் :

ஆயின்—

(i) மேலதிகச் சேர்க்கையானது, வியாபாரத்தின் முன்னைய சொந்தக்காரர் ஒருவரினது வழியுரிமை என்ற வகையில் கொண்டுநடாத்தப்படுகின்றதென மாத்திரம் சுட்டிக்காட்டுமிடத்து, அந்த மேலதிகச் சேர்க்கை அதுகாரணமாகவே பதியப்படுதலுக்கு அவசியமானதாகமாட்டாது ; அத்துடன்

(ii) ஏதேனும் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்டவாறான, கடனிறுக்க வகையில்லாத மரணச்சொத்தொன்றின் சாட்டுதல் பெறுநரினால் அல்லது பெறுநர் ஒருவரினால் அல்லது முகாமையாளர் ஒருவரினால் அல்லது காப்பாளர் ஒருவரினால் வியாபாரம் அவ்வாறு கொண்டுநடாத்தப்படுமிடத்து, பதிவுசெய்தல் அவசியமானதாகமாட்டாது ; அத்துடன்

(iii) இரு ஆட்களினால் அல்லது இரண்டுக்கு மேற்பட்ட ஆட்களினால் ஆதனம் கொள்வனவு செய்யப்படுதல் அல்லது கொள்ளப்படுதல் ஆனது, அது காரணமாகவே அதன் விற்பனையிலிருந்து எழுகின்ற இலாபங்கள் எவையேனும் சொந்தக்காரர்களினால் பங்கிடப்படுவதாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, வியாபாரமொன்றைக் கொண்டுநடத்துவதாகக் கருதப்படலாகாது.

வெளிநாட்டு முதல்வரின் அல்லது வெளிநாட்டுக் குழுவின் சார்பில் செயற்படும் இலங்கையில் உள்ள குழுமம் அல்லது ஆள்.

3. (1) வெளிநாட்டு முதல்வர் ஒருவரினது வியாபாரத்தின் பொது நோக்கத்துக்காக, வியாபாரப் பெயரொன்றின்கீழாயினுஞ்சரி, அல்லது வேறு வகையிலாயினுஞ்சரி, அத்தகைய வெளிநாட்டு முதல்வரின் சார்பில் செயற்படுவதுடன், 1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, கம்பனிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் விலக்களிப்புப் பணிப்பொன்றைப் பெற்றுள்ளதான அல்லது பெற்றுள்ளவரான இலங்கையிலுள்ள ஏதேனும் குழுமம் அல்லது எவரேனும் ஆள் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதத்தில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய குழுமம் அல்லது ஆள் 5 ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்டுள்ள விபரங்களுடன்மேலதிகமாக, அத்தகைய வெளிநாட்டு முதல்வர் ஒவ்வொருவர் தொடர்பிலும் பின்வரும் விபரங்களையும் கொடுத்துதவுதல் வேண்டும் :—

(அ) வெளிநாட்டு முதல்வரின் வியாபாரப் பெயர், முகவரி அத்துடன் வியாபாரத்தின் தன்மை ; அத்துடன்

(ஆ) இலங்கையிலுள்ள குழுமம் அல்லது ஆள் அத்தகைய வெளிநாட்டு முதல்வருக்காகச் செயற்படுவதற்குத் தொடங்கிய தேதி.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட குழுமமொன்றின் அல்லது ஆளொருவரின் வியாபாரமானது, வெளிநாட்டு முதல்வர் ஒருவரின் சார்பில் அல்லது வெளிநாட்டுக்குழு ஒன்றின் சார்பில் செயற்படுவதனையே முழுமையாக அல்லது பிரதானமாகக் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய குழுமம் அல்லது ஆள், (1) ஆம் உட்பிரிவில் தேவைப்படுத்தப்பட்ட விபரங்களுடன் மேலதிகமாக, எந்த வெளிநாட்டு முதல்வருக்காக அல்லது எந்த வெளிநாட்டுக் குழுவுக்காகச் சொல்லப்பட்ட குழுமம்

அல்லது ஆள் பொதுவாக வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களைச் செய்கின்றாரோ அல்லது செய்கின்றதோ அந்த வெளிநாட்டு முதல்வர் அல்லது வெளிநாட்டுக் குழுவின் உறுப்பினர் தொடர்பில் பின்வரும் விபரங்களைக் கொடுத்துதவுதல் வேண்டும் :—

(அ) எவ்விடத்தில் அமைந்ததாயினுமான வியாபாரத்தின் பிரதான அலுவலகத்தினது அமைவிடம் ;

(ஆ) வியாபாரத்தின் தொடக்கத் தேதி ;

(இ) இலங்கையில் வியாபாரத்தின் இடம் (ஏதேனுமிருப்பின்) ;

(ஈ) உரிமையாளர் அல்லது பங்காளர் ஒருவராக இருப்பவரான எவரேனும் தனியாளின் விடயத்தில்—

(i) இப்போதைய முழுப்பெயர் ;

(ii) நாட்டினம் ; அத்துடன்

(iii) வழமையான வதிவிடம் ;

(உ) உரிமையாளராக அல்லது பங்காளராக இருப்பதான ஏதேனும் கூட்டுத்தாபனத்தின் விடயத்தில்—

(i) கூட்டிணைப்புப் பெயர் ;

(ii) எச்சட்டத்தின்கீழ் அத்தகைய கூட்டுத்தாபனம் கூட்டிணைக்கப்பட்டதோ அச்சட்டம் ; அத்துடன்

(iii) அத்தகைய கூட்டுத்தாபனத்தின் பதிவுசெய்யப்பட்ட பிரதான அலுவலகம்.

(3) அறிவிப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான, வெளிநாட்டு முதல்வர் அல்லது வெளிநாட்டுக் குழுவின் உறுப்பினர் ஒருவர் சம்பந்தப்பட்ட, அத்தகைய மேலதிக விபரங்களை, அத்தகைய அறிவிப்பில் தரப்பட்டுள்ள காலத்துக்குள் கொடுத்துதவும்படி, இலங்கையில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்தும் இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் குழுமத்துக்கு அல்லது ஆளுக்குப் பதிவாளர் அறிவிக்கலாம்.

(4) இப்பிரிவில்—

"வெளிநாட்டு முதல்வர்" என்பது, இலங்கைக்கு வெளியில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துகின்ற ஒரு குழுமம் அல்லது ஓர் ஆள் எனப் பொருள்படும் ; அத்துடன்

"வெளிநாட்டுக்குழு" என்பது, வெளிநாட்டுக் கூட்டுத்தாபனம் ஒன்றையும் அத்துடன் அதன் துணைநிலை நிறுவனங்களில் ஏதேனும் ஒன்றினை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைகளையும் கொண்டிருக்கின்ற, அல்லது வெளிநாட்டுக் கூட்டுத்தாபனம் ஒன்றின் துணைநிலை நிறுவனங்களில் எவையேனும் இரண்டினை அல்லது இரண்டுக்கு மேற்பட்டவைகளையும் கொண்டிருக்கின்ற வெளிநாட்டு முதல்வர்களின் குழு ஒன்று எனப் பொருள்படும்.

இலங்கைப் பிரசை அல்லாதவரான தனியாள் முதலியோரினால் கொடுத்துதவப் படவேண்டிய விவரங்கள்.

4. (1) வியாபாரப் பெயரொன்றின்கீழ் இலங்கையில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதற்கு முன்வரும் இலங்கைப் பிரசை அல்லாதவரான எவரேனும் தனியாள், அல்லது பிரசை அல்லாத ஒருவர் பங்காளியாக வுள்ள ஏதேனும் குழுமம், அல்லது இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப் பட்டதான ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு, 1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, கம்பனிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரி வின்கீழ் விலக்களிக்கும் பணிப்பொன்றினைப்பெற்றபின்னர், 5 ஆம் பிரி வின்கீழ் கொடுத்துதவப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் விப ரங்களைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தனியாளின், குழுமத் தின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வியாபாரம், அத்தகைய தனி யாளின், குழுமத்தின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பெயரில், இலங்கைப் பிரசையாக உள்ளவரும் இலங்கையில் வதிவில் உள்ளவருமான ஆளொருவரினால் இலங்கையில் கொண்டுநடத்தப்படுதல் வேண்டும்; அவ் வாள் உள்ளூர் முகாமையாளராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உள்ளூர் முகாமையாளர், இச்சட்டத்தின்கீழ் தனியாளை, குழு மத்தை அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவைச் சார்ந்திருக்கின்ற கடப் பாடுகள் எல்லாவற்றையும் புரிவதற்குத் தனிப்பட பொறுப்பானவராக இருத்தலும் வேண்டும்.

பதிவு பற்றிய விவரங்கள்.

5. (1) பதிவுசெய்யப்படவேண்டுமென இச்சட்டத்தின்கீழ் தேவைப் படுத்தப்படும் குழுமம் ஒவ்வொன்றும் அல்லது ஆள் ஒவ்வொருவரும், அக் குழுமத்தின் அல்லது ஆளின் பிரதான வியாபார இடம் இலங்கையின் எப் பாகத்தில் அமைந்துள்ளதோ அப்பாகத்திலுள்ள பதிவாளர் அலுவலகத்தி லுள்ள பதிவாளருக்கு, பின்வரும் விவரங்களை எழுத்தில் கொண்டிருக் கின்ற கூற்று ஒன்றினை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், அஞ்சலில் அனுப்புவதன் மூலம் அல்லது நேரில் ஒப்படைப்பதன்மூலம் கொடுத்து தவுதல் வேண்டும் :—

(அ) வியாபாரம் கொண்டுநடாத்தப்படும் வியாபாரப் பெயரும் அதன் எழுத்துப் பெயர்ப்பும்;

(ஆ) வியாபாரத்தின் தன்மை;

(இ) இலங்கையில் வியாபாரத்தின் பிரதான இடம்;

(ஈ) வியாபாரத்தின் நோக்கத்துக்காகப் பேணப்படும் ஏதேனும் கிளை அலுவலகத்தின், களஞ்சியத்தின், குதத்தின் அல்லது கிட்டங்கி யின் முகவரி;

(உ) வியாபாரத்தின் தொடக்கத் தேதி;

(ஊ) தனியாள் ஒருவரினால், அல்லது குழுமம் ஒன்றின் பங்காளர்களி னால் (பங்காளர்களுள் எவரும் கூட்டுத்தாபனமொன்றாக இராத விடத்து) வியாபாரம் கொண்டுநடாத்தப்படுமிடத்து, அத் தகைய தனியாளினது அல்லது பங்காளர்கள் ஒவ்வொருவரின தும் பின்வரும் விவரங்கள் :—

(i) இப்போதைய முழுப்பெயர்;

(ii) முன்னைய முழுப்பெயர் (ஏதேனுமிருப்பின்);

(iii) பிறந்த தேதி;

(iv) இப்போதைய நாட்டினம்; அவரது நாட்டினத்தை வெளிப்படுத்தாத நாடுசாராத ஒருவரின் விடயத்தில், அவர் பிறந்த நாடு;

(v) வழமையான வதிவிடம்;

(vi) அவர் உரிமையாளராகவுள்ள அல்லது பங்காளராகவுள்ள வேறு வியாபாரம் ஒவ்வொன்றினதும் பெயரும், அத்தகைய ஏதேனும் வியாபாரத்தினது வியாபாரப் பெயரும் பதிவிலக்கமும்;

(vii) அவர் பணிப்பாளராகவுள்ள ஒவ்வொரு கூட்டுத்தாபனத்தினதும் பெயர்;

(viii) அவரது சொந்தப் பெயரிலாயினுஞ்சரி அல்லது அவரது நியமத்தர் அல்லது வாழ்க்கைத்துணை அல்லது பராயமடையாத பிள்ளைகள் பெயரிலாயினுஞ்சரி, எந்தக் கூட்டுத்தாபனத்தின் இறுத்த பங்கு மூலதனத்தில் இருபத்தைந்து சதவீதத்துக்கு மேல் அவர் வைத்திருக்கின்றாரோ அந்தக் கூட்டுத்தாபனம் ஒவ்வொன்றினதும் பெயர்;

(ix) வேறு ஏதேனும் வியாபாரத் தொழிலின் தன்மை;

(எ) கூட்டுத்தாபனமொன்றினால் அல்லது குழுமம் ஒன்றினால் வியாபாரம் கொண்டு நடாத்தப்படுமிடத்தும், எல்லாப் பங்காளர்களும் கூட்டுத்தாபனங்களாகவே இருக்குமிடத்தும், அத்தகைய ஒவ்வொரு கூட்டுத்தாபனமும் பற்றிய பின்வரும் விவரங்கள்:—

(i) கூட்டிணைக்கப்பட்ட பெயர்;

(ii) எச்சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டதோ அச்சட்டம்;

(iii) கூட்டிணைக்கப்பட்டதன் பதிவிலக்கம் (ஏதேனுமிருப்பின்);

(iv) பதிவுசெய்யப்பட்ட அல்லது பிரதான அலுவலகத்தின் முகவரி;

(v) அதன் பணிப்பாளர்கள் ஒவ்வொருவரினதும் பெயரும் நாட்டினமும்;

(vi) கசற்றிலான அறிவிப்பின்மூலம் அமைச்சர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வேறு விவரங்கள்;

(ஏ) (i) பங்காளர்களில் ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் தனியாட்களாக உள்ள, குழுமம் ஒன்றினால் வியாபாரம் கொண்டு நடாத்தப்படுமிடத்து, (ஊ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விவரங்களும்; அத்துடன்

(ii) பங்காளர்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை கூட்டுத்தாபனங்களாக உள்ள விடயத்தில், (எ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விவரங்களும்;

(ஐ) குழுமம் ஒன்றின் விடயத்தில், பங்குடைமை உடன்படிக்கை கழகத்தில் உள்ளதா அல்லவா என்பது;

(ஒ) வியாபாரம் வேறு எந்த வியாபாரப் பெயரின்கீழ் கொண்டு நடாத்தப்படுகின்றதோ அந்த வேறு வியாபாரப் பெயர் ;

(ஓ) பதிவுசெய்யப்படவேண்டிய குழுமம் அல்லது ஆள், ஏதேனும் வர்த்தக சங்கத்தில், கழகத்தில் அல்லது வர்த்தக ஆணைக்குழுவில் அங்கத்துவம் வகிப்பது தொடர்பான அத்தகைய வேறு விவரங்கள்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் கொடுத்துதவப்பட்ட வியாபாரப் பெயரின் எழுத்துப் பெயர்ப்பு அல்லாத இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வியாபாரப் பெயர்களின்கீழ் வியாபாரமொன்று கொண்டுநடாத்தப்படுமிடத்து, அத்தகைய ஒவ்வொரு வியாபாரப் பெயர் தொடர்பிலும் (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள விதத்தில் தனியான கூற்று ஒன்று கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

**ஏலவேயுள்ள பதிவு எது எப்படியிருப்பினும், சட்டம் ஆரம்பமாகியதன் பின்னர் கொடுத்துதவப்படும் கூற்று.**

6. (1) நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்குமுன்னர், வியாபாரப் பெயரொன்றின்கீழ் வியாபாரமொன்றைக் கொண்டுநடாத்துகின்ற குழுமம் ஒவ்வொன்றும் அல்லது ஆள் ஒவ்வொருவரும், நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் அத்தகைய குழுமம் அல்லது ஆள் பதிவுசெய்யப்பட்டதாயினுஞ்சரி, அல்லவாயினுஞ்சரி, 4 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட விவரங்களின் கூற்றினை, இணைப்பிரதிகளில் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விவரங்களின் கூற்று நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள்ளாக அல்லது விண்ணப்பத்தின்மீது பதிவாளர் அனுமதிக்கக்கூடியவாறான அத்தகைய மேலதிக காலப்பகுதிக்குள்ளாகக் கொடுத்துதவப்படுதல் வேண்டும் என்பதுடன்—

(அ) தனியாளொருவரின் விடயத்தில், அவராலும் ;

(ஆ) கூட்டுத்தாபனம் ஒன்றின் விடயத்தில், அதன் பணிப்பாளராலும் அல்லது செயலாளராலும் ; அத்துடன்

(இ) குழுமம் ஒன்றின் விடயத்தில், எல்லாப் பங்காளர்களாலும், ஒப்பமிடப்படுதலும் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் குழுமம் அல்லது எவரேனும் ஆள் (2) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக அல்லது அத்தகைய மேலதிக காலப்பகுதிக்குள்ளாக (1) ஆம் உட்பிரிவின்கீழான விவரங்களின் கூற்றைக் கொடுத்துதவத்தவறுகின்றவிடத்து, அத்தகைய குழுமத்தின் அல்லது ஆளின் பதிவு தவணைதவறியுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய குழுமத்தின் அல்லது ஆளின் பதிவுச்சான்றிதழ் அத்தகைய தவணை தவறுகையின் தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் பதிவாளர் அத்தகைய நிகழ்வுபற்றி அவரது இடாப்பில் பதிதல் வேண்டும்.

(4) ஏதேனும் குழுமம் அல்லது எவரேனும் ஆள் பதிவு இல்லாதொழிக்கப்பட்டதன்பின்னரும் தொழிலைத் தொடர்ந்து கொண்டுநடாத்துகின்றவிடத்து, அத்தகைய குழுமம் அல்லது ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயி

ரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்பின்னரும் தவறு தொடர்ந்து நடைபெறுகின்றவிடத்து, அத்தகைய குழுமம் அல்லது ஆள், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்பின்னர் தவறு நடைபெறுகின்றதான ஒவ்வொரு நாளுக்கும் நூறுரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும்.

புதிய வியாபாரத்தைத் தொடங்குதல் அல்லது வியாபாரப் பெயரில் மாற்றம்.

7. (1) நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன்பின்னர் வியாபாரப் பெயர் ஒன்றின்கீழ் வியாபாரத்தைக் கொண்டு நடாத்தத் தொடங்குகின்ற அல்லது அத்தகைய தேதியின்பின்னர் வேறு ஏதேனும் காரணத்தினுல் பதிவுசெய்வதற்காளாகின்ற ஒவ்வொரு குழுமமும் அல்லது ஆளும் 5 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட விவரங்களின் கூற்றை இணைப்பிரதிகளில் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் கொடுத்துதவப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட விவரங்களின்கூற்று விதித்துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தொடக்கத்தின் பின்னர் அல்லது அத்தகைய பொறுப்பு எழுந்ததான தேதியின் பின்னர் முப்பது நாட்களுக்குள்ளாக அல்லது விண்ணப்பத்தின்மீது பதிவாளர் அனுமதிக்கக்கூடியவாறுன அத்தகைய மேலதிகக் காலப்பகுதிக்குள்ளாகக் கொடுத்துதவப்படுதலும் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழான விவரங்களின் கூற்று—

(அ) தனியாளொருவரின் விடயத்தில், அவராலும்;

(ஆ) கூட்டுத்தாபனம் ஒன்றன் விடயத்தில், அதன் பணிப்பாளராலும் அல்லது செயலாளராலும்; அத்துடன்

(இ) குழுமம் ஒன்றின் விடயத்தில், எல்லாப் பங்காளர்களாலும்,

ஒப்பமிடப்படுதலும் வேண்டும்.

தடைசெய்யப்பட்ட வியாபாரப் பெயர்கள்.

8. (1) குழுமம் எதுவும், தனியாளெவரும் அல்லது கூட்டுத்தாபனம் எதுவும்—

(அ) பின்வரும் சொற்களை, அதாவது—

(i) "சனுதிபதி," "சனுதிபதிசார்" "தேசிய", "அரச" அல்லது "இலங்கை" அல்லது பதிவாளரின் அபிப்பிராயப்படி சனுதிபதியின் ஆதரவைக் கொண்டுள்ளதென அல்லது அரசாங்கத்துடன் அல்லது அதன் ஏதேனும் திணைக்களத்துடன் ஏதேனும் தொடர்புகொண்டுள்ளதென குறிப்பறிவிக்கின்ற அல்லது குறிப்பறிவிக்கும் சாத்தியமுள்ளவையான சொற்களை;

(ii) "மாநகர" அல்லது "கூட்டிணைக்கப்பட்ட" அல்லது "கம்பனி" என்ற சொல் அல்லது அதன் சுருக்கவடிவங்கள் அல்லது பதிவாளரின் அபிப்பிராயப்படி ஏதேனும் மாநகரசபையுடன் அல்லது வேறு உள்ளூரதிகாரசபையுடன் அல்லது பாராளுமன்றத்தின் சட்டத்தால் அல்லது வேறு வகையில் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் சங்கத்துடன்

அல்லது குழுவுடன் தொடர்பைக் குறிப்பறிவிக்கின்றவை யான அல்லது குறிப்பறிவிக்கச் சாத்தியமுள்ளவையான சொற்களை ; அல்லது

(iii) "கூட்டுத்தாபனம்" அல்லது "சங்கம்" என்னும் சொற்களை ;

(ஆ) அதன் தன்மையின் காரணமாக அல்லது அது எப்பாவனைக்கு உட்படுத்தப்படுமோ அப்பாவனையின் காரணமாக அது ஒழுக்கத்திற்கு அல்லது பொது ஒழுங்கிற்கு முரணானதும் ஏதேனும் சமுதாயத்தின் மத அல்லது இனச்சார்பை அவமதிக்கும் சாத்தியமுள்ள அல்லது அப்பெயரால் அடையாளங்காணப்பட்ட வியாபாரத்தின் அல்லது தொழிலின் தன்மைபற்றி வியாபார அல்லது தொழில் வட்டங்களை அல்லது பொதுமக்களைத் தவறாக இட்டுச்செல்லும் சாத்தியமுள்ள சொல்லை ;

(இ) அத்தகைய வியாபாரப்பெயரின் மொழிபெயர்ப்பொன்றை, உள்ளடக்கியுள்ள வியாபாரப்பெயர் ஒன்றின்கீழ் இலங்கையில் வியாபாரமொன்றைக் கொண்டு நடாத்துதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகள், நியமிக்கப்பட்ட தேதிக்குமுன்னர் பதிவுசெய்யப்பட்ட குழுமமொன்றுக்கு, தனியாளொருவருக்கு அல்லது கூட்டுத்தாபனமொன்றுக்கு ஏற்புடையனவாகமாட்டா.

**விவரங்களின் கூற்றில் மாற்றம்.**

9. (1) ஏதேனும் குழுமம் அல்லது எவரேனும் ஆள் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட எவையேனும் விவரங்களில் மாற்றமொன்று செய்யப்படும்போதெல்லாம் அல்லது ஏற்படும்போதெல்லாம் அத்தகைய குழுமம் அல்லது ஆள், எந்த விவரத்தில் மாற்றமொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த மாற்றம் ஒவ்வொன்றையும் அத்தகைய மாற்றத்தின் தன்மை, தேதி என்பவற்றுடன் குறிப்பிட்டு, கடைசியாக வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழுடன் அல்லது அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் 5 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட விவரங்களின் புதிய கூற்றொன்றை இணைப்பிரதிகளில் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விவரங்களின் கூற்று விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய மாற்றத்தின் முப்பது நாட்களுக்குள் கொடுத்துதவப்படுதலும் வேண்டும் ; அத்துடன்

(அ) தனியாளொருவரின் விடயத்தில், அவராலும் ;

(ஆ) கூட்டுத்தாபனம் ஒன்றின்விடயத்தில், அதன் பணிப்பாளராலும் அல்லது செயலாளராலும் ; அத்துடன்

(இ) குழுமம் ஒன்றின் விடயத்தில் எல்லாப் பங்காளர்களினாலும் அல்லது எவரேனும் ஒரு பங்காளராலும் (இந்த விடயத்தில் அத்தகைய கூற்று அந்தப் பங்காளர்களினால் சத்தியஞ்செய்யப்பட்ட சத்தியக் கடதாசி ஒன்றினால் உறுதிசெய்யப்படுதலும் வேண்டும்)

ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

(3) குழுமம் ஒன்றினுள் புதிய பங்காளரொருவர் உட்புகுவதன் மூலம் விவரங்களில் மாற்றம் எதுவும் எழுகின்றவிடத்து, (1) ஆம் உட்பிரிவின் கீழான கூற்று அத்தகைய புதிய பங்காளர் உட்பட பங்காளர் ஒவ்வொருவராலும் ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) குழுமமொன்றின் எவரேனும் பங்காளர் தொடர்பில் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (எ) என்னும் பந்தியின்கீழ் கொடுத்துதவப்பட்ட விவரங்களில் மாற்றமெதுவும் ஏற்படுமிடத்து, அத்தகைய கூற்று அந்தப் பங்காளரினல் ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

(5) ஆளொருவர் குழுமமொன்றின் பங்காளரொருவராக இல்லாதொழிவதனல் விவரங்களில் மாற்றமெதுவும் எழுகின்றவிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழான கூற்றென்று—

(அ) தொடர்ந்திருக்கும் பங்காளர்கள் ஒவ்வொருவராலும் அத்துடன் பங்காளராக இல்லாதொழிகின்ற ஆளினலும் ; அல்லது

(ஆ) தொடர்ந்திருக்கும் பங்காளர் ஒவ்வொருவராலும், (ஆயினும் கூற்றனது ஒப்பமிடும் ஒவ்வொருவராலும் விதித்துரைக்கப்பட்டவாறன சத்தியக் கடதாசி மூலம் உறுதி செய்யப்படுதல் வேண்டும்) ; அல்லது

(இ) பங்காளரொருவராக இல்லாதொழியும் ஆளினல், (ஆயினும் கூற்றனது விதித்துரைக்கப்பட்டவாறக சத்தியக்கடதாசி மூலம் அவரால் உறுதிசெய்யப்படுதல் வேண்டும்),

ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்டதும் வெளிப்படுத்துநரைத் தவிர்ந்த வேறு எவரேனும் ஆள் பங்காளரொருவராக இருக்கின்றர் அல்லது பங்காளரொருவராக இல்லாதொழிந்துள்ளார் எனக் குறிப்பிடுவதும் அல்லது எவரேனும் ஆள் பங்காளரொருவராக இருக்கின்றர் அல்லது பங்காளரொருவராக இல்லாதொழிந்துள்ளார் எனக் குறிப்பிடாது விடுகின்றதுமான ஏதேனும் சத்தியக்கடதாசி, அத்தகைய வேறு ஆளுக்காக அல்லது அவருக்கெதிராக பங்காளரொருவராக அவரது பொறுப்பு அல்லது பொறுப்பின்மை தொடர்பில் சான்றுதல் ஆகாது.

(7) இப்பிரிவில் உத்தேசிக்கப்பட்ட விவரங்களிலான மாற்றமானது எல்லாப் பங்காளர்களும் உடனிகழ்வாக இல்லாதொழிவதனையும் அத்துடன் தொழில் இடையருது தொடர்வதற்கெனப் புதிய பங்காளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதனையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(8) இப்பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் கூற்றில், சத்தியக் கடதாசி மூலம் உறுதிப்படுத்துதலைத் தேவைப்படுத்தும் ஏதேனும் விவரம் பதிவுசெய்யப்படுமுன்னர் மேலும் நுண்ணய்வு செய்யப்படுதல் வேண்டுமெனப் பதிவாளர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர் புலனய்வு செய்யப்படுவதற்கு அமைவாக, கூற்றை ஏற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அத்தகைய நோக்கத்திற்கென வேறு எவரேனும் ஆளிடமிருந்து எவையேனும் முக்கியமான விவரங்களின் மேலதிகமான எண்பிப்பையும் கோரலாம்; அத்துடன் அவசியம் என அவர் கருதக்கூடியவாறன அத்தகைய விசாரணையை நடாத்தலாம்.

(9) பதிவாளர், முறையான விசாரணையின் பின்னர், சொல்லப்பட்ட கூற்றிலுள்ள விவரங்களில் அவசியமானவிடத்து அத்தகைய கூற்றில் அவசியமான சீராக்கத்தைச் செய்து சீராக்கப்பட்டவாறான அத்தகைய கூற்றைப் பதிவுசெய்யலாம்.

(10) ஒன்பதாம் உட்பிரிவின்கீழ் நடாத்தப்பட்ட விசாரணையொன்றினை யடுத்து, பதிவாளர் ஏதேனும் கூற்றைப் பதிவுசெய்ய மறுக்கின்றவிடத்து, அத்தகைய மறுப்பினால் இடருறும் ஆள் அத்தகைய மறுப்பு அறிவிக்கப் பட்ட நேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக தோதான மாவட்ட நீதிமன்றத்திற்கு அதற்கெதிராக மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் அத்தகைய நீதிமன்றம் முறையான விசாரணையின்பின்னர் அது தகுந்த தெனக் கருதுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

பதிவுசெய்தலில் தவனை தவறு கைக்கான தண் டம்.

10. விவரங்களின் கூற்றொன்றை அல்லது விவரங்களில் ஏதேனும் மாற்றத்தைக் கொடுத்துதவ வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத் தப்பட்ட ஏதேனும் குழு அல்லது எவரேனும் ஆள், இச்சட்டத்தின் மூலம் குறித்துரைக்கப்பட்ட முறையிலும் காலத்துக்குள்ளாகவும் நியாயமான காரணமின்றி அவ்வாறு செய்வதில் தவணைதவறினால் அவ் வாறு தவணைதவறிய குழுமம் அல்லது ஆள் நீதிவானொருவர் முன்னான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும் அத்துடன் குற் றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்பின்னர் தவறுகை தொடர்ந்துறுகின்ற ஒவ் வொரு நாளுக்கும் நூறு ரூபாவைக் கொண்ட குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய குழுமத்தை அல்லது ஆளை எந்த நீதிமன்றம் விளங்குகின்றதோ அந்த நீதிமன்றம் அவசியப்படு மிடத்து, கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள்ளாக தேவைப்படுத்தப்பட்ட விவரங்களின் கூற்றொன்றைப் பதிவாளருக்குக் கொடுத்துதவ வேண்டுமெனக் கட்டளையுமிடலாம்.

தவறுகையி லுள்ள ஆட்க ளின் ஆற்ற லின்மை.

11. (1) ஏதேனும் வியாபாரம் தொடர்பில் விவரங்களின் கூற்றொன்றை அல்லது விவரங்களில் ஏதேனும் மாற்றத்தைக் கொடுத்துதவுமாறு இச் சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் குழு அல்லது எவரேனும் ஆள் அவ்விதம் செய்வதில் தவணைதவறுகின்றவிடத்து, அவர் தவணை தவறுகையிலிருக்கும் ஏதேனும் நேரத்தில் அவ்வியாபாரம் தொடர்பாக அத்தகைய தவணை தவறியவரால் அல்லது அவர் சார்பில் ஆக்கப்பட்ட அல்லது செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழான அல் லது அதனின்றெழுகின்றனவான, அத்தவணை தவறியவரின் உரிமைகள், வியாபாரப் பெயரினாலாயினுஞ்சரி, வேறுவகையாகவாயினுஞ்சரி, வழக் கினால் அல்லது வேறு சட்ட நடவடிக்கையால் வலுவுக்கிடப்படற்பால தாதல் ஆகாது :

ஆயினும்—

(அ) தவணை தவறியவர் இப்பிரிவால் சுமத்தப்பட்ட ஆற்றலின்மைக் கெதிராக நிவாரணத்திற்கென நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க லாம் என்பதுடன், நீதிமன்றமானது, தவணைதவறுகை தற் செயலானது; அல்லது கவனக்குறைவின் அல்லது வேறு ஏதே னும் போதுமான ஏதுவின் காரணமானது அல்லது வேறு கார ணங்களின்மீது நிவாரணமளிப்பது நீதியானதும் ஒப்புர

வானதும் ஆகும் எனத் திருப்திப்படுவதன்மீது, நீதிமன்றம் வேறுவகையாகக் கட்டளையிட்டாலன்றி, விண்ணப்பத்தின் செலவுகள் தவணை தவறியவரால் செலுத்தப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனையின்மீது அல்லது நீதிமன்றம் விதிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு எவையேனும் நிபந்தனைகள் இருப்பின் அவற்றின்மீது பொதுவாக அல்லது குறிப்பிடப்பட்ட எவையேனும் ஒப்பந்தங்கள் தொடர்பில் அத்தகைய நிவாரணத்தை அளிக்கலாம் ; ஆனால் விண்ணப்பம் பற்றிய அறிவித்தல், நீதிமன்றம் கட்டளையிடக்கூடியவாறான அத்தகைய முறையில் சேர்ப்பிக்கப்படுவதன் மீதும் வெளியிடப்படுவதன்மீதும் அன்றி, அத்தகைய நிவாரணம் அளிக்கப்படுதலாகாது ; அத்துடன் ஒப்பந்தத்திற்கான ஏறத்தவர் எவரும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டிருப்பின் அவர் ஒப்பந்தம் செய்திருக்கமாட்டாரென நீதிமன்றம் திருப்தியுறும் வகையில் எண்பிப்பாராயின் ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நிவாரணம் அளிக்கப்படுதலாகாது ;

(ஆ) இதனகத்து அடங்கியுள்ளதெதுவும், மேலே சொல்லப்பட்டவாறான அத்தகைய ஒப்பந்தம் தொடர்பாக, தவணை தவறியவருக்கெதிராக வேறு எவரேனும் கட்சிக்காரர்களுக்குள்ள உரிமைகளைப் பங்கப்படுத்துதலாகாது ;

(இ) வேறு எவரேனும் கட்சிக்காரரால் தவணை தவறியவருக்கெதிராக அத்தகைய ஒப்பந்தம் தொடர்பாக அத்தகைய கட்சிக்காரரின் உரிமைகளை வலியுறுத்துவதற்காக, வழக்கெதுவும் அல்லது நடவடிக்கையெதுவும் தொடங்கப்பட்டிருந்தால், இதனகத்து அடங்கியுள்ளதெதுவும், அத்தகைய ஒப்பந்தம் தொடர்பாக அந்தக் கட்சிக்காரருக்கெதிராகத் தவணை தவறியவருக்கு இருந்திருக்கக்கூடிய அத்தகைய உரிமைகளை எதிர்க்கோரிக்கைமூலம், எதிரீடு மூலம் அல்லது வேறுவகையாக, அந்த வழக்கில் அல்லது நடவடிக்கையில் வலியுறுத்துவதிலிருந்து தவணை தவறியவரைத் தடுத்தலாகாது.

(2) இப்பிரிவில் "நீதிமன்றம்" என்பது தவணை தவறியவர் ஒருவரால், ஒப்பந்தமொன்றை வலியுறுத்துவதற்கான ஏதேனும் வழக்கு அல்லது வேறு சட்ட நடவடிக்கை எந்நீதிமன்றத்தில் தொடங்கப்படுகின்றதோ, அந்த நீதிமன்றம் என்று பொருளாகும்.

பொய்யான கூற்றுகளுக்கான தண்டம்.

**12.** இச்சட்டத்தின்கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கூற்று அதில் கையொப்பமிடும் எவரேனும் ஆளின் அறிவுக்கு எட்டியவரையில் ஏதேனும் முக்கிய விடயம் தொடர்பாகப் பொய்யானவிடயம் எதனையேனும் கொண்டிருந்தால், அந்த ஆள் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஆறுமாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

## பாகம் II

### நியமனங்கள், நடைமுறைப்படுத்தல், நிருவாகம்

பதிவாளரை நியமித்தலும் அவரது கடமைகளும்.

**13.** (1) இலங்கையின் வியாபாரப்பெயர்கள் பதிவாளராக இருப்பதற்கென அல்லது செயலாற்றுவதற்கென ஆளொருவர் நியமிக்கப்படலாம்.

(2) அத்தகைய நியமனம் செய்யப்படாதவிடத்து, கம்பனிகள் பதிவாளர் அல்லது அந்நேரத்தில் அவ்வாறு செயலாற்றுகின்ற எவரேனும் ஆள் வியாபாரப் பெயர்கள் பதிவாளராக இருத்தல் வேண்டும். அந்த ஆள் இச் சட்டத்தின்கீழ் பதிவாளருக்குள்ள கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) வியாபாரப் பெயர்கள் பதிவாளர், அமைச்சரின் பணிப்புரைக்கமைவாக, இச்சட்டத்தினது ஏற்பாடுகளின்கீழ் இலங்கை முழுவதிலும் வியாபாரப் பெயர்களைப் பதிவுசெய்வதன்மீது பொதுவான கட்டுப்பாடும் கண்காணிப்பும் உரித்தாக்கப்பட்டவராதல் வேண்டும்.

மேலதிகப் பதிவாளர்களும் உதவிப்பதிவாளர்களும்.

**14.** (1) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்துக்கும் காலத்துக்குக் காலம் பின்வருவோர் நியமிக்கப்படலாம் :—

(அ) (இதனகத்துப்பின்னர் மேலதிகப் பதிவாளர் எனக் குறிப்பீடு செய்யப்படும்) வியாபாரப் பெயர்கள் மேலதிகப் பதிவாளராக இருப்பதற்கு அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்குத் தகுதியானவரும் பொருத்தமானவருமான ஆளொருவர், அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் உதவிப் பதிவாளர்களெனக் குறிப்பீடு செய்யப்படும்) வியாபாரப் பெயர்கள் உதவிப் பதிவாளர்களாக இருப்பதற்கு அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்குத் தகுதியானவர்களும் பொருத்தமானவர்களுமான ஆட்கள்.

(2) கொழும்பு நிருவாக மாவட்டம் தவிர்ந்த, ஒவ்வொரு நிருவாக மாவட்டம் தொடர்பிலும் மேலதிகப் பதிவாளர்களின் நியமனம் செய்யப்படாதவிடத்து, அத்தகைய ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் அரசாங்க அதிபர், அவரது மாவட்டத்திற்கான வியாபாரப் பெயர்கள் மேலதிகப் பதிவாளராதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்கப் பதவிப்பெயர் சூட்டப்படுதலும் வேண்டும்.

(3) கொழும்பு நிருவாக மாவட்டத்துக்காக உதவிப் பதிவாளர்கள் நியமனம் செய்யப்படாதவிடத்து, கம்பனிகளின் உதவிப் பதிவாளர்கள் அல்லது கம்பனிகளின் பதில் உதவிப் பதிவாளர்கள், கொழும்பு நிருவாக மாவட்டத்தின் உதவிப் பதிவாளர்களாக இருத்தல் வேண்டும்.

(4) கொழும்பு நிருவாக மாவட்டம் தவிர்ந்த ஒவ்வொரு நிருவாக மாவட்டம் தொடர்பிலும் உதவிப் பதிவாளர்களின் நியமனம் செய்யப்படாதவிடத்து, மேலே சொல்லப்பட்ட வெவ்வேறு நிருவாக மாவட்டங்கள் ஒவ்வொன்றினதும் அலுவலக உதவியாளர்கள் அல்லது மேலதிக அலுவலக உதவியாளர்கள், இலங்கையின் நிருவாக மாவட்டங்கள் ஒவ்வொன்றினதும் உதவிப் பதிவாளர்களாதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கப் பதவிப்பெயர் சூட்டப்படுதலும் வேண்டும்.

(5) எவரேனும் மேலதிகப் பதிவாளர் அல்லது உதவிப் பதிவாளர், இச் சட்டத்தினுல் அல்லது இச்சட்டத்தின்கீழ் பதிவாளர்மீது சுமத்தப்பட்ட அல்லது பதிவாளர்களுக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை, பதிவாளரின் அதிகாரத்தின் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

பதிவகத்தைத் தாபித்தல்.

15. (1) கசெற்றிலான அறிவிப்பு மூலம் அமைச்சர் பின்வருவனவற்றைத் தாபிக்கலாம் :—

(அ) பிரதான பதிவு அலுவலகமாக இருக்கவேண்டிய, இச்சட்டத்தில் "பதிவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், வியாபாரப் பெயர்கள் பதிவகம் என அழைக்கப்படவேண்டிய அலுவலகம்; அத்துடன்

(ஆ) ஏனைய நிருவாக மாவட்டங்கள் ஒவ்வொன்று தொடர்பிலும் மாவட்டப் பதிவு அலுவலகங்கள்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் பதிவகம் தாபிக்கப்படாது இருக்குமிடத்து, கம்பனிகள் பதிவாளர் திணைக்களம், கொழும்பு நிருவாக மாவட்டத்திற்கான பதிவு அலுவலகமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் பிரதான பதிவு அலுவலகமாதலும் வேண்டும்.

(3) மாவட்டப் பதிவு அலுவலகங்கள் தாபிக்கப்படாது இருக்குமிடத்து (கொழும்பு நிருவாக மாவட்டத்துக்கான அரசாங்க அதிபரின் அலுவலகம் தவிர்ந்த) இலங்கையின் வெவ்வேறு நிருவாக மாவட்டங்களின் அரசாங்க அதிபர் அலுவலகங்கள் அத்தகைய நிருவாக மாவட்டங்களுக்கான பதிவு அலுவலகங்களாக முறையே இருத்தல் வேண்டும்.

பதிவாளருக்கு விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய கடமை.

16. (1) பதிவாளர், அவர் குறித்துரைக்கக்கூடியவாருன அத்தகைய காலத்துக்குள்ளாக, ஆளெவரையேனும் அவ்வாள் அல்லது அவர் பங்காளரொருவராகவுள்ள குழுமம், இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட வேண்டுமா என்பது பற்றி அல்லது பதிவுசெய்யப்பட்ட விபரங்களில் மாற்றமொன்று செய்யப்பட வேண்டுமா என்பது பற்றி உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காகப் பதிவாளருக்கு அவசியமானதெனத் தோன்றுகின்ற அத்தகைய விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தலாம், அத்துடன் கூட்டுத்தாபனமொன்றின் விடயத்தில், அத்தகைய விபரங்களைச் சமர்ப்பிக்கும்படி செயலாளரை அல்லது செயலாளரின் கடமைகளைப் புரிகின்ற கூட்டுத்தாபனத்தின் வேறெவரேனும் அலுவலரைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட விபரங்களைப் பதிவாளரால் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதிக்குள்ளாக அல்லது அவர் அனுமதிக்கக்கூடிய அத்தகைய மேலான காலப்பகுதிக்குள்ளாக சமர்ப்பிக்கத் தவறுகின்ற ஆளெவரும் அல்லது பொய்யான விபரங்களைச் சமர்ப்பிக்கின்ற ஆளெவரும் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான எவையேனும் நடவடிக்கைகளில், நீதிமன்றம், அது பொருத்தமானதெனக் கருதுகின்றவிடத்து, அதன் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலத்துக்குள்ளாக அத்தகைய விபரங்களை அல்லது அத்தகைய திருத்தப்பட்ட விபரங்களைச் சமர்ப்பிக்கும்படி அவ்வாளுக்குக் கட்டளையிடலாம்.

(4) அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவலிலிருந்து ஏதேனும் குழுமம் அல்லது எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட வேண்டுமென அல்லது பதிவுசெய்யப்பட்ட விபரங்களில் மாற்றமொன்று செய்யப்படவேண்டுமெனப் பதிவாளருக்குத் தோன்றினால், அவர், குழுமத்துக்கு அல்லது ஆளுக்கு அனுமதிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்துக்குள்ளாக, தேவைப்படுத்தப்பட்ட விபரங்களைத் தனக்குச் சமர்ப்பிக்குமாறு குழுமத்தை அல்லது ஆளைத் தேவைப்படுத்தலாம். ஆனால் இப்பிரிவின்கீழ் பெறப்பட்ட தகவலிலிருந்து இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுகை கண்டுபிடிக்கப்பட்டிருக்குமிடத்து, எக்காலத்திற்குள் குழுமம் அல்லது ஆள், விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு, இப்பிரிவின்கீழ் பதிவாளரால் தேவைப்படுத்தப்பட்டுள்ளாரோ, அக்காலம் முடிவடைவதற்குமுன்னர், அத்தகைய தவறுகை தொடர்பாக எவரேனும் ஆளுக்கெதிராக இச்சட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதல் ஆகாது.

தேடுகையிடுவதற்குள்ள தத்துவம்.

17. (1) இச்சட்டத்தின்கீழ் கடமைகளை நிறைவேற்றுவதற்காகப் பதிவாளரால் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் தகவலைக் கண்டறியும் நோக்கத்திற்காகப் பதிவாளர், அத்தகைய தகவல் அவருக்குக் கொடுத்துதவப்படக்கூடிய சாத்தியமில்லை என அபிப்பிராயப்பட்டால் அல்லது அத்தகைய தகவல் மறைக்கப்படும் என அஞ்சினால், தேடுதல் செய்யும் நோக்கத்திற்கென நியமிக்கப்பட்டுள்ள அலுவலரொருவரை, தேடுகை செய்யுமாறும் அவர் தேவைப்படுத்தக்கூடிய அத்தகைய தகவலைப் பெறுமாறும் எழுத்தில் அதிகாரமளிக்கலாம் என்பதுடன் அத்தகைய அதிகாரவளிப்புப் பற்றி அத்தகைய, நோக்கத்துக்காக வைத்துப் பேணப்பட்டுவரும் இடாப்பில் பதிவுசெய்யப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தகவலைக் கண்டறியும் நோக்கத்துக்காக ஓராம் உட்பிரிவின்கீழ் பதிவாளரால் அவ்வாறு சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், அவசியமாயின் சமாதான அலுவலரொருவருடன் சேர்ந்து செல்லலாமென்பதுடன் பின்வரும் செயல்கள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையேனும் செய்யலாம் :—

(அ) எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் குழுமத்திற்குச் சொந்தமான எவையேனும் புத்தகங்கள், இடாப்புகள் அல்லது வேறு ஆவணங்கள் ஏதேனும் கட்டிடத்தில் அல்லது இடத்தில் காணப்படக்கூடும் என்று நம்புவதற்கு அவருக்குக் காரணமிருக்குமிடத்து, அக்கட்டிடத்தினுள் அல்லது இடத்தினுள் புகுந்து தேடலாம்; அத்துடன் எவையேனும் அத்தகைய புத்தகங்களை, இடாப்புகளை அல்லது ஆவணங்களைப் பரிசோதிக்கலாம் அல்லது பரிசோதிப்பிக்கலாம்;

(ஆ) ஏதேனும் கட்டிடத்தினை அல்லது இடத்தினைத் தேடுகையிடும்போது அங்கு காணப்படக்கூடிய ஏதேனும் புத்தகம், இடாப்பு அல்லது வேறு ஆவணத்திலிருந்து குறிப்பு எடுக்கலாம் அல்லது பொருட் பதிவேடொன்றை எடுக்கலாம் அல்லது பிரித்தெடுத்த பகுதியொன்றை எடுக்கலாம்;

(இ) இச்சட்டத்தின்கீழான அல்லது இச்சட்டத்துக்குத் தொடர்பான ஏதேனும் கருமம் தொடர்பாக அக்கட்டிடத்தில் அல்லது இடத்தில் காணப்படும் ஆளெவரையும், அவர் கேள்விக்குட்படுத்தலாம். அத்துடன் தேடுகைகள் தொடர்பான 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இப்பிரிவின்கீழான தேடுகைகளுக்கும் ஏற்புடையனவாகக்கூடிய அளவுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) ஏதேனும் கட்டிடத்தை அல்லது இடத்தினைத் தேடுகையில் அங்கு காணப்படக்கூடிய எவையேனும் புத்தகங்கள், இடாப்பு அல்லது வேறு ஆவணங்களை அகற்றலாம், அத்துடன் எவருடைய பாதுகாவலிலிருந்து அவை அகற்றப்பட்டனவோ அவ்வாளுக்குப் பற்றுச்சீட்டொன்றை வழங்கலாமென்பதுடன் அத்தகைய புத்தகங்களின், இடாப்புகளின் அல்லது வேறு ஆவணங்களின் விபரங்களைத் தாமதமின்றி (1) உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட இடாப்பில் பதியலாம்.

(3) பதிவாளரால் அல்லது பதிவாளரினால் சிறப்பாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் ஏதேனும் தகவலைச் சமர்ப்பிக்குமாறு அல்லது ஏதேனும் புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கொடுக்குமாறு தேவைப்படுத்தப்படும்பொழுது அவ்வாறு செய்யத் தவறுகின்ற அல்லது முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் சோதனையைச் செய்யத் தடுக்கின்ற அல்லது அனுமதிக்கத் தவறுகின்ற ஏதேனும் குழுமம் அல்லது எவரேனும் ஆள், கூட்டுத்தாபனம், முகவர், பணிப்பாளர், அலுவலர் அல்லது அத்தகைய குழுமத்தின் ஊழியர் அல்லது ஆள் தவறானது அவரது அறிவில்லாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தவிர்ப்பதற்காக அவசியமான எல்லாக் கவனத்தையும் பிரயோகித்தாரென எண்பித்தாலொழிய, தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். இச்சட்டத்தின்கீழ் அத்தகைய தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள், கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இருக்குமிடத்து, தவறு புரியப்பட்ட நேரத்தில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளரொருவராக அல்லது அலுவலரொருவராக இருந்த ஆள் ஒவ்வொருவரும், அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

18. (1) இச்சட்டத்தைப் பின்பற்றிச் செய்யப்பட்ட ஏதேனும் கூற்றை ஏதேனும் குழுமத்திடமிருந்து அல்லது ஆளிடமிருந்து பெறுவதன்மேல் பதிவாளர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, அக்கூற்றைப் பதிவு செய்வித்துப் பதிவேட்டில் கோப்பிடச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், அக்குழுமத்திற்கு அல்லது ஆளுக்குப் பதிவுச் சான்றிதழொன்றை வழங்குதல் அல்லது அஞ்சல்மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்:

பதிவாளர் கூற்றைக் கோப்பிடுதலும் பதிவுச் சான்றிதழ் வழங்குதலும் பெயர்ப் பலகையையும், இலக்கத்தையும் காட்சிக்கு வைத்தலும்.

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டம் தொடங்குந் தேதிக்கு முன்னர் வழங்கப்பட்ட குழுமமொன்றின் அல்லது ஆளின் செல்லுபடியுள்ள பதிவுச் சான்றிதழொன்று, எல்லா நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவிற்கு அமைவாக, இப்பிரிவின்கீழ் செல்லுபடியுடைய சான்றிதழொன்று வழங்கப்படும் வரை செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எக்குழுமத்துக்கு அல்லது ஆளுக்குப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டதோ, அக்குழுமம் அல்லது ஆள், அதனைப் பெற்ற தேதியிலிருந்து பதினன்கு நாட்களுக்குள்ளாக அக்குழுவின் அல்லது ஆளின் பிரதான தொழிலிடத்திலும் ஏனைய ஒவ்வொரு தொழிலிடத்திலும், தெளிவாகத் துலாம்பரமான ஒரு நிலையில் அத்தகைய சான்றிதழை அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட குழுமம் ஒவ்வொன்றும் அல்லது ஆள் ஒவ்வொருவரும்—

(i) அதன் பதிவுசெய்யப்பட்ட வியாபாரப் பெயரையும், பதிவுச்சான்றிதழ் இலக்கத்தையும், எந்த இடத்தில் வியாபாரம் நடாத்தப்படுகின்றதோ அந்த இடம் ஒவ்வொன்றினதும் வெளிப்புறத்தே, இலகுவாக விளங்கக்கூடிய எழுத்துக்களில் துலாம்பரமானதொரு நிலையில் நிறத்தினால் எழுதவோ அல்லது இணைக்கவோ செய்வித்தல் வேண்டும் ;

(ii) அதன் அஞ்சல் தலைப்புகளில் பின்வருவனவற்றை வெளிப்படுத்துதல் வேண்டும் :—

(அ) தனியாளொருவரால், அல்லது ஒரு குழுமத்தின் பங்காளர்களால் கொண்டு நடாத்தப்படும் வியாபாரமொன்றின் விடயத்தில் (பங்காளருள் எவரும் கூட்டுத்தாபனமொன்றாக இல்லாதவிடத்து) வியாபாரப் பெயரும், வியாபாரத்தைக்கொண்டு நடாத்துகின்ற தனியாளின் பெயரும் அல்லது எல்லாப் பங்காளர்களது பெயர்களும் வியாபாரத்தின் பதிவுச் சான்றிதழ் இலக்கமும் அத்துடன் அத்தகைய வியாபாரத்துக்கான பிரதான இடமும் ;

(ஆ) குழுமமொன்றின் பங்காளர்களால் கொண்டு நடாத்தப்படும் வியாபாரமொன்றின் விடயத்தில் (ஒரு அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பங்காளர் கூட்டுத்தாபனமாக இருக்குமிடத்து) பதிவுசெய்யப்பட்ட வியாபாரப் பெயர் அல்லது தனியாட்களாகவுள்ள பங்காளர்களின் பெயர்கள், கூட்டுத்தாபனங்களாகவுள்ளவர்களான எல்லாப் பங்காளர்களினதும் கூட்டிணைப்புப் பெயரும் அத்துடன் கூட்டிணைப்பு விபரங்களும், வியாபாரத்தின் பதிவுச் சான்றிதழ் இலக்கமும் அத்துடன் அத்தகைய வியாபாரத்திற்கான பிரதான இடமும் ;

(இ) ஒரு கூட்டுத்தாபனத்தால் கொண்டு நடாத்தப்படும் வியாபாரமொன்றின் விடயத்தில், அத்தகைய கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைப்புப் பெயரும், கூட்டிணைப்பு விவரங்களும், வியாபாரத்தின் பதிவுச் சான்றிதழ் இலக்கமும் அத்துடன் அத்தகைய வியாபாரத்திற்கான பிரதான இடமும் ;

(iii) அதன் பற்றுச் சீட்டுகளிலும் அனுப்பு பொருட்பட்டியல்களிலும் பின்வருவனவற்றை வெளிப்படுத்தல் வேண்டும் :—

(அ) வியாபாரத்தின் பெயர், அத்துடன்

(ஆ) வியாபாரத்தின் பதிவுச் சான்றிதழ் இலக்கம்.

(4) இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குழுமமும் அல்லது ஆளொவ்வொருவரும், இப்பிரிவின் (2) ஆம் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(5) இரண்டாம் அல்லது (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுகையில் தவறுகையொன்று செய்யப்படுமிடத்து, ஆளொவ்வொருவரும் அத்துடன் அத்தகைய ஆள் குழுமமொன்றின் பங்காளரொருவராக இருந்தால், அந்தக் குழுமத்தின் பங்காளரொவ்வொருவரும் அத்துடன் கூட்டுத்தாபனமொன்றின் விடயத்தில் அதன் ஒவ்வொரு பணிப்பாளரும், செயலாளரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

(6) ஏதேனும் கூற்றின் அல்லது அத்தகைய பதிவுச் சான்றிதழின் பதிவானது அத்தகைய விபரங்களை அல்லது கூற்றைக் கொடுத்துதவிய ஆளுக்கெதிராகத் தவிர, அத்தகைய கூற்றிலுள்ள விவரங்களின் உண்மை தொடர்பாக முதற்றோற்ற அளவிலான சான்றாக அல்லது வேறு வகையில் பொருள் கொள்ளப்படுதலாகாது.

சுட்டி வைத்திருக்கப்பட வேண்டும் என்பது.

19. பதிவு அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் பதிவாளரானவர், இச்சட்டத்தின்கீழ் அந்த அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட எல்லாக் குழுமங்களினது வியாபாரப் பெயர்களினதும், ஆட்களினதும் பதிவின் தொடரிலக்கத்துடன் சேர்ந்ததான சுட்டியொன்றையும் அத்துடன் இலங்கை முழுவதிலுமுள்ள அலுவலகமொவ்வொன்றிலும் அவ்வாறு பதிவு செய்யப்பட்ட எல்லாக் குழுமங்களினது வியாபாரப் பெயர்களினதும் ஆட்களினதும் பொதுவான சுட்டியொன்றையும் வைத்திருத்தல் வேண்டும்.

இடாப்பிலிருந்து பெயர் இல்லாதொழிந்தமையும் அகற்றப்பட்டமையும் பற்றியதான அறிவிப்பு.

20. (1) இச்சட்டத்தின்கீழ், பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் குழுமம், அல்லது எவரேனும் ஆள், வியாபாரப் பெயரொன்றின் கீழ் வியாபாரம் கொண்டு நடாத்தாதொழிந்தால், அவ்வாறு வியாபாரம் நடாத்தப்படாதொழிந்த மூன்று மாதங்களுக்குள், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், அந்த வியாபாரப்பெயரின்கீழ் குழுமம் அல்லது ஆள் வியாபாரத்தைக் கொண்டு நடாத்தவில்லை என்றதொரு கூற்றை, பதிவாளருக்கு அஞ்சல் மூலம் அனுப்பிவைத்தல் அல்லது ஒப்படைத்தல், வியாபாரம் கொண்டு நடத்தாதொழிந்த காலத்தில் குழுமத்தில் பங்காளர்களாகவுள்ள ஆட்களது, அல்லது தனிப்பட்டவரது, அல்லது அவர் இறந்திருப்பின் அவரது சொந்தப் பிரதிநிதியினது அல்லது கூட்டுத்தாபனமொன்றின் விடயத்தில் அதன் பணிப்பாளர் ஒவ்வொருவரினதும் அல்லது செயலாளரது கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவால் தேவைப்படுத்தப்பட்ட கூற்றைக் கொடுப்பது கடமையாகவுள்ளவரான எவரேனும் ஆள், மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய காலத்திற்குள் அவ்வாறு செய்யத்தவறினால், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், சுருக்கமுறை விளக்கத்தின்பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கூற்றைப் பெற்றுக் கொண்டதன்மேல், பதிவாளர், அத்தகைய கூற்றைக் கோப்பிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய குழுமத்தின் அல்லது ஆளின் பதிவை அகற்றுகின்றதான புறக்குறிப்பொன்றைச் செய்தலும் வேண்டும்.

(4) பதிவாளரானவர், இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்துகொண்ட ஏதேனும் குழுமம் அல்லது எவரேனும் ஆள் வியாபாரத்தைக் கொண்டு நடாத்தவில்லை என நம்புவதற்கு நியாயமான ஏதுவைக் கொண்டிருந்தால், அவர்—

(அ) அத்தகைய வெளியீட்டின் ஒரு மாதத்திற்குள் அவரால் ஆட்சேபனை பெறப்படாவிட்டாலன்றி, அந்தக் குழுமத்தின் அல்லது ஆளின் பெயர் இடாப்பிலிருந்து அகற்றப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிட்டுக் கசெற்றில் அறிவித்தலொன்றை வெளியிடச் செய்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) மேற்சொல்லப்பட்ட அறிவித்தலின் பிரதியொன்றை, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட குழுமத்திற்கு அல்லது ஆளுக்கு, அத்துடன் பங்காளரொவ்வொருவருக்கும், அவரவரது வதிவிட முகவரிக்குப் பதிவஞ்சல்மூலம் உடனடியாக அனுப்பச்செய்தல் வேண்டும்.

(5) குறிப்பிட்ட அறிவித்தலானது சேர்ப்பிக்கப்பட்டு ஒருமாத காலப் பகுதிக்குள் பணிப்பாளர் மேற்சொல்லப்பட்ட அறிவித்தலுக்கான ஆட்சேபனை எதனையும் பெற்றுக்கொள்ளாவிட்டால், அத்தகைய குழுமத்தின் அல்லது ஆளின் பெயரை இடாப்பிலிருந்து அகற்றிவிடலாம்.

பதிவை மறுப்பதற்குள்ள தத்துவம்.

21. (1) வியாபாரப் பெயரொன்றின் பயன்பாடு, அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்துக்கு முரணானதாகவுள்ளது அல்லது எந்த வியாபாரப் பெயரின் பயன்பாடு 8 ஆம் பிரிவின்கீழ் தடைசெய்யப்பட்டுள்ளதோ அந்த வியாபாரப் பெயர் ஒன்றாக வியாபாரப் பெயரொன்றுள்ளது எனப் பதிவாளர் திருப்திப்படின், அந்த வியாபாரப் பெயரின்கீழ் தொழில் கொண்டுநடாத்துகின்ற எதேனும் குழுமத்தை அல்லது எவரேனும் ஆளை அவர் பதிவுசெய்வதற்கு மறுக்கலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் வியாபாரப் பெயரொன்றைப் பதிவு செய்தலானது, அத்தகைய பதிவினின்று புறம்பாக அதன் பயன்பாடு தடைசெய்யப்படக்கூடுமாயின், அந்தப் பெயரின் பயன்பாட்டை அதிகாரமளிக்கின்றதெனக் கொள்ளப்படுதலாகாது.

பதிவை முடிவுறுத்துவதற்குள்ள தத்துவம்.

22. (1) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பதிவாளரானவர் எந்த ஏதுவின்மேல், பதிவு செய்வதற்கான மறுப்பு 21 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவால் அதிகாரமளிக்கப்படுமோ, அந்த ஏதுவின் மேல் வியாபாரப் பெயரொன்றின்கீழ் வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும் ஏதேனும் குழுமத்தின் அல்லது ஆளின் பதிவை முடிவுறுத்தல் வேண்டும்.

(2) பதிவாளர், அந்த வியாபாரப் பெயரின்கீழ் வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும் குழுமத்திற்கு அல்லது ஆளுக்கு அத்தகைய அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வியாபாரப் பெயரை மாற்றுவதற்குப் பதிவாளர் ஏற்றுக் கொள்ளத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அறிவிக்கின்ற அறிவித்தலைப் பதிவஞ்சல் மூலம் அனுப்பினாலன்றி (1) ஆம் உட்பிரிவின்கீழான பதிவு முடிவுறுத்தலெதுவும் செய்யப்படுதலாகாது.

(3) குழுமம் அல்லது ஆள் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள், பதிவாளர் ஏற்றுக் கொள்ளத்தக்கனவான அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தவறுமிடத்து, பதிவாளரானவர் அக்காலப்பகுதி முடிவுற்றதன்மேல், அத்தகைய குழுமத்தின் அல்லது ஆளின் பதிவை முடிவுறுத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய குழுமத்தின் அல்லது ஆளின் பெயரை இடாப்பிலிருந்து அகற்றுதலும் வேண்டும்.

மறுக்கப்பட்டதான அல்லது முடிவுறுத்தப்பட்டதான வியாபாரப் பெயரைப் பயன்படுத்துவதற்கான தண்டம்.

23. இச்சட்டத்தின்கீழ், எந்தவொரு வியாபாரப் பெயரின் பதிவு மறுக்கப்பட்டுள்ளதோ அல்லது முடிவுறுத்தப்பட்டுள்ளதோ, அந்தவொரு வியாபாரப் பெயரை, தொடர்ந்து பயன்படுத்துகின்ற ஏதேனும் குழுமம் அல்லது எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும், அத்துடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்பின்னர், தொடர்ந்து புரியப்படும் தவறு தொடர்பாக ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபா குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

பதிவை மறுத்தல் அல்லது முடிவுறுத்தல் பற்றிய அறிவித்தல்.

24. பதிவாளர், 20 ஆம் 21 ஆம் அல்லது 22 ஆம் பிரிவுகளின்கீழ் ஏதேனும் குழுமத்தின் அல்லது எவரேனும் ஆளின் வியாபாரப் பெயரைப் பதிவு செய்வதற்கு மறுக்குமிடத்து அல்லது அதன் பதிவை அகற்றுமிடத்து அல்லது முடிவுறுத்துமிடத்து, அத்தகைய மறுப்பு, அகற்றுகை அல்லது முடிவுறுத்துகை பற்றிய அறிவித்தல், அத்தகைய குழுமத்திற்கு அல்லது ஆளுக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

மேன்முறையீடுகள்.

25. இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் கீழ் பதிவாளரினாலாக்கப்பட்ட ஏதேனும் முடிவினால் அல்லது கட்டளையினால் இன்னலுறும் ஆளெவரும் அத்தகைய முடிவு அல்லது கட்டளை எழுத்தில் அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், அதற்கெதிராக, தோதான மாவட்ட நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

முத்திரைத் தீர்வையினின்று விலக்களித்தல்.

26. ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னரான வழக்கு நடவடிக்கைகளி எல்லாவற்றிலும்—

(அ) பதிவாளரானவர் ஏதேனும் முத்திரையைக் கொடுத்தவும்படி தேவைப்படுத்தப்படுதலோ அல்லது ஏதேனும் முத்திரைத் தீர்வைக்குப் பொறுப்பாக்கப்படுதலோ ஆகாது ;

(ஆ) பதிவுச் செலவு தொகையானது, நீதிமன்றத்தின் தற்றுணிபிலாக இருத்தல் வேண்டும், ஆனல் பதிவாளர், வேறெவரேனும் திறத்தவருக்குச் செலவு தொகைகளைச் செலுத்துமாறு கட்டளையிடப் படுதலாகாது.

பதிவு செய்யப் பட்ட கூற்றுக் களைப் பரிசோதித்தலும், அத் தாட்சிப்படுத்தப் பட்ட பிரதிகளை வழங்குதலும்.

27. (1) ஆளெவரும், விதித்துரைக்கப்பட்டவாறுன அத்தகைய கட்டணங்களின் கொடுப்பனவின்மேல், பதிவாளரால் கோப்பிடப்பட்ட ஆவணங்களைப் பரிசோதிக்கலாம்.

(2) ஆளெவரும், ஏதேனும் குழுமத்தின் அல்லது ஆளின் பதிவுச் சான்றிதழை அல்லது பதிவாளரால் அத்தாட்சிப்படுத்தப்படுவதற்காக விதித்துரைக்கப்பட்ட படிவமெதிலும் செய்யப்பட்ட கூற்று எதனதும் பிரதியொன்றை, ஒளிப்படப் பிரதியொன்றை அல்லது பிரித்தெடுக்கப்பட்ட பகுதியொன்றைத் தேவைப்படுத்தலாமென்பதுடன் அத்தகைய சான்றிதழுக்கு, அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிக்கு, அல்லது பிரித்தெடுக்கப்பட்ட பகுதிக்கு விதித்துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய கட்டணங்கள் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(3) ஒரு பதிவுச் சான்றிதழ் அல்லது இச்சட்டத்தின்கீழ் கொடுத்தவப்பட்ட ஏதேனும் கூற்றின் பிரதியொன்று, ஒளிப்படப்பிரதி, அல்லது அதிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதி, பதிவாளரின் கைப்பட (தானே பதிவாளரென எண்பிக்கவேண்டியது அவசியமில்லை) உண்மைப் பிரதியொன்றென அத்தாட்சிப்படுத்தப்படவேண்டுமாயின் குடியியல் அல்லது குற்றவியல் சட்ட நடவடிக்கைகள் எல்லாவற்றிலும், சான்ருக, ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

ஏதேனும் இடாப்பின், தொகுதிகளின், கோப்பின் அல்லது ஆவணத்தின் சேதமடைந்த பிரதிகளை ஆக்குவதற்கும் மீள அமைக்கப்பட்ட இருமடித் தாள்களைத் தயாரிப்பதற்கும் உட்புகுத்துவதற்குமான தத்துவம்.

28. (1) இச்சட்டத்தின்கீழ் வைத்திருக்கப்படும் ஏதேனும் இடாப்பின் ஏதேனும் தொகுதி அல்லது ஏதேனும் கோப்பு அல்லது ஆவணம் அத்தொகுதி, கோப்பு அல்லது ஆவணம் சீர்செய்து அளிப்பதற்கு இயலாத அத்தகைய முறையில் சேதமடைந்துள்ளதெனப் பதிவாளர் திருப்தியடையுமிடத்து, அவர் பணிக்கக்கூடியவாறுன அத்தகைய முறையில் அதன் பிரதியொன்றை அவர் ஆக்குவிக்கலாம் என்பதுடன் உண்மையென்று உறுதிப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு உண்மையென்று உறுதிப்படுத்தப்பட்ட ஏதேனும் பிரதி, அது ஒரு பிரதியாகவுள்ள தொகுதியை அல்லது இருமடித்தாளை அல்லது ஆவணங்களைப் பதிலீடு செய்வதுடன், அத்தகைய பிரதி, பதிலீடுசெய்த தொகுதி அல்லது கோப்பு அல்லது ஆவணம் போன்ற அதே சட்டவலுவும் பயன்பாடுமுள்ளதாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதலும் வேண்டும்.

(3) பதிவாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் எந்தத் தொகுதியின், கோப்பின் அல்லது ஆவணத்தின் பிரதியொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்தச் சேதமடைந்த தொகுதி, கோப்பு அல்லது ஆவணம் ஒவ்வொன்றும் அவசியமாகக்கூடியவாறான ஏதேனும் குறிப்பீட்டினைச் செய்வதற்காக நியாயமாக இயலக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குப் பாதுகாப்பாக வைப்பிக்கச்செய்தல் வேண்டும்.

(4) பதிவாளர், முறையான புலனாய்வுகளுக்குப் பின்னர், ஏதேனும் இடாப்பின் அல்லது கோப்பின் ஏதேனும் தொகுதியின் ஏதேனும் இருமடித்தாள் காணாமல்போயிருந்ததெனவும் அதை மீளப்பெறமுடியாதெனவும் அல்லது பதிவுகளை அல்லது அதன் பதிவுகளின் ஏதேனும் முக்கிய பகுதியைத் தெளிவற்றதாக ஆக்கக்கூடியவாறு அத்தகைய இருமடித்தாள் நிரந்தரமாகச் சிதைக்கப்பட்டிருந்ததெனவும் அல்லது அழிக்கப்பட்டிருந்ததெனவும் சேதப்படுத்தப்பட்டிருந்ததெனவும் திருப்திப்படுமிடத்து, அவர் மீளமைக்கப்பட்ட இருமடித்தாள்களைத் தயாரிப்பிக்கலாம்

(5) இருமடித்தாள் எதுவும்—

(அ) காணாமற்போன அல்லது சிதைக்கப்பட்ட அல்லது சேதமடைந்த இருமடித்தாளில் ஆரம்பத்திலிருந்த விவரங்களைக் கண்டறிவதில் ஏற்றுக்கொள்ளப்படப்படுவதற்கும் பதிவாளரினால் பயன்படுத்தப்படுவதற்குமான சான்றுக்கு ;

(ஆ) மீளவமைக்கப்பட்ட இருமடித்தாளைத் தயாரிப்பது பற்றிய பதிவாளரினால் அறிவித்தல் கொடுக்கப்படுவதற்கு ;

(இ) மீளவமைக்கப்பட்ட இருமடித்தாளிலுள்ள எவையேனும் விவரங்களினால் பாதிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் ஆட்சேபனை தெரிவிக்கப்படுவதற்கு ; அத்துடன்

(ஈ) பதிவாளரினால் எவையேனும் அத்தகைய ஆட்சேபனைகள் விசாரிக்கப்படுவதற்கு,

ஏற்பாடு செய்யும் ஒழுங்குவிதிகளுக்கிணங்கவல்லாது, (4) ஆம் உட்பிரிவின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மீளவமைக்கப்படுதலாகாது.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் இருமடித்தாள் பதிவாளரால் மீளவமைக்கப்படுமிடத்து, பதிவாளர் மீளவமைத்த இருமடித்தாளை விதித்துரைக்கப்பட்ட விதத்தில் உண்மையென்று உறுதிப்படுத்தல் வேண்டும். அத்துடன் அதன்பின்னர் விடயத்திற்கேற்றாற்போல் காணாமற்போன இருமடித்தாளினால் முன்னர் இடம்பெற்றிருந்த இடத்தில் அல்லது சிதைக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட இருமடித்தாளின் இடத்தில் இடாப்பின் தோதான தொகுதியில் அல்லது இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தயாரிக்கப்பட்ட ஒரு தொகுதியின் ஒரு பிரதியில் மீளவமைக்கப்பட்ட இருமடித்தாளை உட்புகுத்துவித்தல் வேண்டும்

அத்துடன் மீளவமைக்கப்பட்ட இருமடித்தாள் அவ்வாறு உண்மைப்படுத்தப்பட்டு உட்புகுத்தப்படும்போது எல்லா நோக்கங்களுக்குமாக மீளவமைக்கப்பட்ட இருமடித்தாளினால் பதிவிடு செய்யப்பட்ட இருமடித்தாளைப்போன்று அதே சட்டவலுவும் பயன்பாடும் உள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) பதிவாளர், அவசியமென அவர் கருதுகின்ற அத்தகைய விசாரணையின்பின்னர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வைக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் இடாப்பில், சான்றிதழில், கோப்பில் அல்லது ஆவணத்தில் உள்ள ஏதேனும் பதிவில் கண்டுபிடிக்கக்கூடியவாறுள்ள எழுத்து வழுவை அல்லது விடுபாட்டைத் திருத்தலாம், அத்துடன் அந்நோக்கத்துக்காக ஏதேனும் அத்தகைய சான்றிதழைக் கோரலாம் என்பதுடன் அதைத் திருத்தியமைக்கலாம் அல்லது அதற்குப் பதிலாக ஒரு புதிய சான்றிதழை வழங்கலாம்.

அறிவித்தலை வழங்குதல்.

29. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கொடுக்கப்பட அல்லது வழங்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிவித்தல், எழுத்துமூலமான தொடர்பு, சான்றிதழ் அல்லது ஏனைய ஆவணம், அது எவருக்கு விலாசமிடப்பட்டுள்ளதோ, அவரின் வியாபாரத்தினது பதிவு செய்யப்பட்ட பிரதான தொழில் இடத்திற்குப் பதிவாளரினால் அஞ்சலில் அனுப்பப்பட்டால் முறையாகக் கொடுக்கப்பட்டுள்ளதென அல்லது வழங்கப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

பழைய பதிவேடுகளை அழித்தல் முதலியன.

30. பதிவாளர், அவற்றை வைத்திருத்தல் மேலும் அவசியமில்லை அல்லது விரும்பத்தக்கதல்லவென அவர் கருதினால், ஏழு வருடங்களுக்குக் குறையாத காலத்திற்கு வைக்கப்பட்டிருந்த, கோப்பிடப்பட்டிருந்த அல்லது பதிவு செய்யப்பட்டிருந்த எவையேனும் ஆவணங்களை, அவ்வாறு செய்வதற்கான தனது உள்நோக்கத்தை கசேற்றில் ஒரு மாத அறிவித்தல் கொடுத்தபின்னர் அழிக்கலாம் அல்லது தேசிய சுவடிகள் திணைக்களத்திற்கு வழங்கலாம்.

அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதிகள் சான்றாக இருத்தல்.

31. வியாபாரப் பெயர்கள் பதிவாளரின் அலுவலகத்தில் இச்சட்டத்தின்கீழ் கோப்பிடப்பட்ட அல்லது வைக்கப்பட்ட எவையேனும் ஆவணங்களிலிருந்து, இடாப்புகளிலிருந்து அல்லது வேறு புத்தகங்களிலிருந்து அல்லது (தாமே பதிவாளர் என நிரூபிக்கப்படத் தேவையற்ற) பதிவாளரினால் முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்டதான அச்சடித்த, ஒளிப்புகைப்படமெடுத்த, இயந்திரவியல்மூலமோ, இலத்திரனியல் மூலமோ அல்லது பிறவாறோ உருவாக்கப்பட்ட, தட்டச்சுப் பொறிக்கப்பட்ட அல்லது எழுதப்பட்ட பிரதிகள் அல்லது பிரித்தெடுத்த பகுதிகள், இலங்கையின் எல்லா நீதிமன்றங்களிலும் எல்லா வழக்கு நடவடிக்கைகளிலும் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்; இவற்றிற்குச் சான்றாக மூலப்பிரதிகளைக்கொண்டு மேலும் எண்பித்தலோ அல்லது மூலப்பிரதிகளைக் காண்பித்தலோ அவசியமில்லை.

காலம் கடந்து விட்டதென விண்ணப்பத்தைக் கருதுவதற்குப் பதிவாளருக்குள்ள தத்துவம்.

32. (1) இச்சட்டத்தின் 5 ஆம், 6 ஆம் அல்லது 9 ஆம் பிரிவுகளின்கீழ் விபரங்களின் கூற்று ஒன்றைக் கொடுத்துதவியுள்ள ஒரு குழுமம் அல்லது ஓர் ஆள் பதிவுச் சான்றிதழொன்றை வழங்குவதற்காக எழுத்துமூலம் பதிவாளரினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய விவரங்களை அவருக்கு அளிக்கத் தவறுமிடத்து அல்லது பதிவாளரினால் எழுத்தில் தேவைப்படுத்தப்பட்டவாறு மூல விண்ணப்பத்திற்கு எவையேனும் திருத்தங்களைச் செய்யத் தவறுமிடத்து, தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தகைய விவரங்களை அளிக்குமாறு அல்லது பதிவாளரினால் கோரப்பட்டவாறு விண்ணப்பத்திற்கு எவையேனும் திருத்தங்களைச் செய்யுமாறு அத்தகைய குழுமத்துக்கு அல்லது ஆளுக்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் எழுத்துமூலம் அறிவித்தல் ஒன்றைப் பதிவாளர் விடுக்கலாம். அத்துடன் அத்தகைய குழுமம் அல்லது ஆள் அதன்பின்னர் ஒரு மாதத்தினுள் அல்லது பதிவாளரினால் வழங்கப்பட்டவாறான அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்தினுள் அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கி ஒழுகத் தவறுமிடத்து பதிவாளர் அத்தகைய ஒரு விண்ணப்பம் காலம் கடந்துவிட்டதாகக் கருதலாம் அத்துடன் அதன்மீதான ஒரு சான்றிதழை வழங்குவது சம்பந்தமாக மேலும் நடவடிக்கை எடுக்காதுவிடலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய குழுமம் அல்லது ஆள், மூல விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான மேலும் ஒரு கட்டணத்தைச் செலுத்தியிருப்பதுடன் மூல விண்ணப்பத்தில் பதிவாளரினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தகைய விவரங்களை வழங்கியுமிருப்பின் அல்லது மூல விண்ணப்பத்திற்குப் பதிவாளரினால் தேவைப்படுத்தப்பட்ட திருத்தங்களைச் செய்துமிருப்பின் காலங்கடந்த அத்தகைய ஒரு விண்ணப்பத்தின் மீது மேலும் நடவடிக்கை எடுக்கலாம்.

(2) ஏதேனும் குழுமம் அல்லது எவரேனும் ஆள், இப்பிரிவின்கீழ் எவ் வியாபாரப் பெயரின் பதிவு, காலம் கடந்ததாக உள்ளதோ அந்த வியாபாரப் பெயரைத் தொடர்ந்து பயன்படுத்துமிடத்து, அத்துடன் (1) ஆம் உட்பிரிவின் காப்புவாசகத்திற்கு இணங்கி ஒழுக நடவடிக்கைகள் எடுக்காதிருக்குமிடத்து, அத்தகைய குழுமம் அல்லது ஆள் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டாயிரம் ரூபாவிற்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கும், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டபின்னர் தொடர்ந்து புரியப்படும் அக்குற்றம் தொடர்பில் ஒவ்வொரு நாளுக்கும் தொடர்ந்து நூறு ரூபா குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகளை ஆக்குவதற்கான தத்துவம்.

33. (1) பின்வரும் எவையேனும் விடயங்கள் தொடர்பாக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:—

(அ) இச்சட்டத்தின் கீழ் பதிவாளருக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படவேண்டிய படிவங்கள்;

(இ) இச்சட்டத்தின் கீழ் பதிவாளரினால் புரியப்படவேண்டிய கடமைகள்;

(ஈ) பதிவாளரினால் செய்யப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட செயல்களைப் புரிதல்;

(உ) இருமடித்தாள்களை மீளவமைத்தல்; அத்துடன்

(ஊ) இச்சட்டத்தின்கீழ் பதிவு தொடர்பாக விதித்துரைக்கப்படக்கூடிய எல்லா விடயங்களும் பொதுவாக அதன் நடாத்துகையும் அதனை ஒழுங்குபடுத்தலும் அதன் இடைநேர்விளைவான எவையேனும் விடயங்களும்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும். அவ்வாறு வெளியிடப்படும் திகதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று அது நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் அது வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியாகக்கூடிய விரைவாக அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படவேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எவற்றிற்கும் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கம் செய்யப்பட்டதாகக் கருதப்படும் திகதி பற்றி கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

பொய்யான கூற்றுகளுக்கான அல்லது பதிவு செய்யப்பட்டதென வியாபாரப் பெயர்களின் பொய்யான பிரதிநிதித்துவத்திற்கான தண்டம்.

34. (1) (அ) பதிவு செய்யப்பட்டிராதபோது அவ்வாறு பதிவு செய்யப்பட்டதாக ஒரு வியாபாரப் பெயரை அறிந்து பிரதிநிதித்துவப்படுத்தும் அல்லது வியாபாரப் பெயருடன் பிழையான அல்லது பொய்யான ஒரு இலக்கத்தை அறிந்துகொண்டு பயன்படுத்தும்;

(ஆ) பொய்யானதென அறிந்துகொண்டு இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் கூற்றை அல்லது சத்தியக்கடதாசியைக் காண்பிக்கும் அல்லது அளிக்கும் அல்லது காண்பிப்பதற்கு அல்லது அளிப்பதற்குச் செய்விக்கும்,

ஆள் எவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் ஒரு நீதிவான் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது இரண்டாயிரம் ரூபாவிற்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கான ஒரு மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(2) "பதிவு செய்யப்பட்டது" என்னும் சொல்லை அல்லது பதிவு பெறப்பட்டுள்ளதென்பதைக் குறிப்பிடும் ஏதேனும் சுருக்கவடிவத்தை, எழுத்தை அல்லது எழுத்துக்களை, வியாபாரப் பெயர் தொடர்பில் அல்லது இச்சட்டத்தின் கீழ் அத்தகைய வியாபாரப் பெயர் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதென நம்பும் வண்ணம் பொதுமக்களைத் தவறாக வழி நடத்துவதற்கு பிழையான அல்லது பொய்யான ஒரு பதிவு இலக்கத்தை வியாபாரப் பெயர் தொடர்பில் ஓர் ஆள் பயன்படுத்தினால், இப்பிரிவின் நோக்கங்களுக்காக அவர் வியாபாரப் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதென்பதைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார் எனக் கருதப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனங்களினால் புரியப்படும் தவறுகள்.

35. கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றினால் இச்சட்டத்தின் கீழ் தவறு ஒன்று புரியப்பட்டிருக்குமிடத்து, தவறு புரியும் காலத்தில் அக்குழுவின் ஒரு பணிப்பாளராக, பொதுமுகாமையாளராக, செயலாளராக அல்லது ஏனைய இதையொத்த அலுவலராக அல்லது ஏதேனும் அத்தகைய தரத்தில் செயலாற்றக் கடமைப்பட்ட ஒவ்வோர் ஆளும், அவரது அனுமதியின்றி அல்லது மறைமுக ஆதரவு இன்றித் தவறு புரியப்பட்டதெனவும், அத்தரத்தில் அவரது பணிகளின் தன்மை தொடர்பாகவும் எல்லாச் சூழ்நிலைகள் தொடர்பாகவும் தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு முறையான விழிப்புக்கவனம் எல்லாவற்றையும் அவர் பிரயோகித்தார் எனவும் அவர் எண்பித்தாலன்றி, அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் எனக் கருதப்படுதல் வேண்டும்.

குறித்த சில தவறுகளை இணக்குதல்.

36. (1) இச்சட்டத்தின் கீழ் பதிவாளரினால் தேவைப்படுத்தப்பட்டவாறான விவரங்களின் எவையேனும் கூற்றை அல்லது விவரங்களின் ஏதேனும் மாற்றத்தை, அல்லது பதிவாளரினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய விவரங்களை, பதிவாளரிடம் கோப்பிடுமாறு அல்லது ஒப்படைக்குமாறு அத்தகைய குழுமத்தை அல்லது ஆளைக் கோரும் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுடன் இணங்கியொழுக ஏதேனும் குழுமம் அல்லது எவரேனும் ஆள் தவறுமிடத்து, அத்துடன் அத்தகைய தவறுகை காரணமாக இச்சட்டத்திற்கெதிராகத் தவறு ஒன்றைப் புரியுமிடத்து, பொருத்தமானதெனப் பதிவாளர் கருதினால் அவர், அத்தகைய தவறின் பொருட்டு அத்தகைய குழுமத்துக்கு அல்லது ஆளுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தொடுப்பதற்குப் பதிலாக அல்லது அத்தகைய வழக்கு ஏற்கனவே தொடுக்கப்பட்டிருப்பின் அத்தகைய தவறுகளின் பொருட்டு அத்தகைய குழுமத்திற்கு அல்லது ஆளுக்கு எதிராக அத்தகைய வழக்கைத் தொடர்ந்து நடாத்துவதற்குப் பதிலாக, தவறொன்றினை இணக்குவதில் முறையானதென அவரினால் கருதப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை அத்தகைய குழுமத்திடமிருந்து அல்லது ஆளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்; அத்துடன் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் தொகை, திரட்டு நிதியில் வரவு வைக்கப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தவறை இணக்குவதில் பெறப்பட்ட அத்தகைய ஒவ்வொரு பணத்தொகையின் பதிவேடும் பதிவாளரினால் வைக்கப்பட்டுப் பேணப்படும் இடாப்பில் பதியப்படுதலும் வேண்டும்.

(2) பதிவாளர், ஏதேனும் தவறினை இணக்குவதில் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் பணத்தொகையைப் பெற்றுக்கொள்ளுமிடத்து, அத்தவறு சம்பந்தமாக அத்தகைய குழுமத்திற்கு அல்லது ஆளுக்கு எதிராக வழக்கு நடவடிக்கை எடுக்கப்படுதலாகாது அல்லது வழக்கு நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்தால் தொடர்ந்து நடாத்தப்படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தவறொன்றை இணக்குவதில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகையானது, பதிவாளரினால் அதனைச் செலுத்துவதற்கென நிர்ணயிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதிக்கு அல்லது பதிவாளர் அனுமதிக்கக்கூடியவாறான அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்துக்குச் செலுத்தப்படாதிருக்குமிடத்து, பதிவாளரானவர், அத்தகைய கொடுப்பனவின் தவணை தவறுகை பற்றி, நீதிவானொருவருக்கு அறிக்கையிடலாமென்பதுடன், அதற்கான

தொகையினை, அத்தொகையானது நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாகவிருப்பின் எம்முறையில் அறவிடப்படுமோ அதேமுறையில், அத்தகைய தவணை தவறுகை தொடர்பில் அத்தகைய குழுமத்திடமிருந்து அல்லது ஆளிடமிருந்து அறவிடுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய நீதிமன்றமானது தவணை தவறியுள்ள தொகையானது திரட்டு நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டுமெனப் பணித்தல் வேண்டும்.

உள்ளூர் முகாமையாளரினால் வியாபாரம் கொண்டு நடாத்தப்படல்.

37. (1) இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்ற எவரேனும் தனியாள் அல்லது எதேனும் குழுமத்தின் எல்லாப் பங்குதாரர்களும் அல்லது ஏதேனும் கூட்டுத்தாபனத்தின் எல்லாப் பணிப்பாளர்களும் செயலாளரும், இலங்கைக்கு வெளியே வதியும் ஏதேனும் விடயத்தில், தனியாளினது, குழுமத்தினது அல்லது கூட்டுத்தாபனத்தினது வியாபாரமானது, ஓர் உள்ளூர் முகாமையாளரினால், அத்தனியாளினது, குழுமத்தினது அல்லது கூட்டுத்தாபனத்தினது பெயரில், இலங்கையில், கொண்டு நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உள்ளூர் முகாமையாளரானவர், இச்சட்டத்தின்கீழ் தனியாள், குழுமம் அல்லது கூட்டுத்தாபனம் தொடர்பான எல்லாக் கடப்பாடுகளுக்கும் தன்னளவில் பொறுப்பானவராதலும் வேண்டும்.

(2) ஏதேனும் வியாபாரத்திற்காக, (1) ஆம் உட்பிரிவின் நியதிகளில் உள்ளூர் முகாமையாளர் எவரும் நியமிக்கப்படவில்லையெனப் பதிவாளரின் கவனத்திற்குக் கொணரப்பட்டிருக்குமிடத்து, பதிவாளரானவர் அவ்வுட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும்படி, அத்தகைய தனியாளுக்கு அல்லது அத்தகைய குழுமத்தின் பங்குதாரர்களுக்கு அல்லது அத்தகைய கூட்டுத்தாபனத்தின் எல்லாப் பணிப்பாளர்களுக்கும் செயலாளர்களுக்கும் அறிவித்தல் வழங்கலாம்.

அத்தகைய அறிவித்தலானது வழங்கப்பட்டதிலிருந்து மூன்று மாத காலப்பகுதிக்குள்ளாக அத்தகைய அறிவித்தலுடன் இணங்கியொழுகத் தவறும் பட்சத்தில், பதிவாளரானவர், கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், அத்தகைய தனியாளின், குழுமத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் பதிவினை நீக்கிவிடுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ், உள்ளூர் முகாமையாளரினாலான ஏதேனும் கடப்பாடு தொடர்பிலான தவணைதவறுகையின் விடயத்தில், அவர் விடயத்திற்கேற்றாற்போன்று எந்தத் தனியாளின் பெயரில் அல்லது எந்தக் குழுமத்தின் பங்குதாரரின் பெயரில் அல்லது எந்தக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரின் அல்லது செயலாளரின் பெயரில் வியாபாரத்தினைக் கொண்டு நடாத்துகின்றாரோ, அவ்வவற்றிற்குள்ள அதே பொறுப்புடைமைகள், பொறுப்புக்கள் மற்றும் தண்டங்களுக்கு அமைந்தவராதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் எல்லாத் தண்ட ஏற்பாடுகளும் பிற ஏற்பாடுகளும் அதற்கிணங்கிப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "உள்ளூர் முகாமையாளர்" என்பது வெளிநாட்டில் வதிகின்றவரும் இலங்கையில் வியாபாரத்தலமொன்றைக் கொண்டிருப்பவருமான எவரேனும் ஆளின் அல்லது ஏதேனும்

குழுமத்தின் சார்பில் அல்லது ஆளுக்காக அல்லது குழுமத்திற்காக, எழுத்தில் நியமிக்கப்பட்ட அல்லது அற்றோணிற் தத்துவத்தின்கீழ் செயலாற்றுகின்ற அல்லது வியாபாரத்தை நடாத்துகின்ற அத்துடன் உண்மைப்படியான முகாமையாளரொருவராக காசோலைகளில் கையெழுத்திடுகின்ற அல்லது செயலாற்றுகின்ற எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்.

**பதிவாளரினால் தற்றுணிபுத் தத்துவம் பிரயோகிக்கப்படுதல்.**

38. சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் ஏதேனும் தற்றுணிபுத் தத்துவமானது பதிவாளருக்கு வழங்கப்பட்டிருக்குமிடத்து, அவர் அத் தத்துவத்தினை, அதன்மூலம் பாதிக்கப்பட்ட திறத்தவர்களுக்குப் பிரதிகூலமாக, அத்தகைய திறத்தவர்களுக்கு தம் திறம் உரைப்பதற்கான வாய்ப்பொன்றினை வழங்காமல், பிரயோகித்தலாகாது.

**எழுத்து வழுக்களைத் திருத்துதல்.**

39. பதிவாளரானவர், அவர் அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின் பின்னர், இச்சட்டத்தின்கீழ் அவரினால் வைத்திருக்கப்படுகின்ற அல்லது பேணப்படுகின்ற இடாப்பிலுள்ள எவையேனும் பதிவுச் சான்றிதழில் அல்லது எவையேனும் பதிவேட்டில் காலத்துக்குக்காலம் கண்டுபிடிக்கப்படக்கூடியவாறான எவையேனும் எழுத்து வழுவினைத் திருத்தலாம்.

**பதிவாளருக்கெதிராக தொடர்ச்சி அமைதலாகாது என்பது.**

40. இச்சட்டத்தின் நோக்கத்துக்காக, நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக, பதிவாளருக்கெதிராக தொடர்ச்சி அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எவையும் அமைதலாகாது.

**சட்ட அலுவலர்களின் பணிப்புகளைப் பதிவாளர் விடுக்கலாம் என்பது.**

41. பதிவாளரானவர், இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளினை நிருவகிப்பதில் சந்தேகம் அல்லது இடர்ப்பாடு எழும் ஏதேனும் விடயத்தில், அவ்விடயத்தின்மீது பணிப்பு வழங்குவதற்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அல்லது மன்றாடியார் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்கலாம்.

**பதிவாளர்கள் பகிரங்க சேவையாளர்களாகவிருத்தல் வேண்டும் என்பது.**

42. பதிவாளர், மேலதிகப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள் அல்லது அத்தகைய ஏதேனும் பதவியில் அப்போதைக்குச் செயலாற்றுகின்ற ஆள் எவரும், அவர் அப்பதவியை வகிக்கும் காலத்திற்கு, தண்டனைச் சட்டக்கோவையின் கருத்திற்குள்ளாக பகிரங்க சேவையாளரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

**இடாப்புகள் முதலியவற்றைப் பேணுதல்.**

43. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வைத்திருக்கப்பட்டுப் பேணப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட இடாப்புகள் யாவும் பதிவாளரின் மேற்பார்வையின்கீழ், நிருவாக மாவட்டங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள முறையான பதிவு அலுவலகங்களில் வைக்கப்பட்டுப் பேணப்படுதல் வேண்டும்.

## பாகம் III

### மதியுரை ஆணைக்குழுவின் அமைப்பும் தத்துவங்களும்

மதியுரை ஆணைக்குழுவின் நியமனம் முதலியன.

44. (1) வியாபாரப் பெயர்கள் தொடர்பிலான சட்டம் தொடர்பில் அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயத்தின் மீது அமைச்சருக்கு மதியுரை வழங்கும் நோக்கங்களுக்காக, அமைச்சரானவர்—

(அ) பொருத்தமான தகைமைகளைக் கொண்டுள்ள, ஐந்திற்குக் குறையாததும் பத்திற்கு மேற்படாததுமான ஆட்களைக் கொண்டுள்ள (இதனகத்துப்பின்னர் "மதியுரை ஆணைக்குழு" எனக் குறிப்பிடு செய்யப்படும்) ஆணைக்குழு ஒன்றை உருவாக்கலாம்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆட்களுள் ஒருவரை, சொல்லப்பட்ட மதியுரை ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கலாம்.

(2) (அ) வியாபாரப் பெயர்கள் மற்றும் அமைச்சரினால் காலத்துக்குக் காலம் குறிப்பிடு செய்யப்படக்கூடியவாறான வியாபாரப் பெயர்களுக்கு ஏற்புடையதான சட்டம் என்பன தொடர்பிலான ஏதேனும் விடயம் அல்லது கேள்விமீது விசாரணை செய்து அமைச்சருக்கு அறிக்கையிடுதல் ;

(ஆ) காலத்துக்குக் காலம் வியாபாரப் பெயர்கள் தொடர்பானதும் அவற்றுக்கு ஏற்புடைத்தானதுமான சட்டத்தினை மீளாய்வு செய்தலும் அத்தகைய சட்டத்திற்கு மாற்றம், திரிபு அல்லது சேர்க்கை என்பனவற்றுக்காக அமைச்சருக்குப் பிரேரணைகளைச் செய்தலும் ;

(இ) பந்தி (அ) அல்லது பந்தி (ஆ) என்பனவற்றில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள விதப்புரைகளைச் செய்வதில், மதியுரை ஆணைக்குழுவானது அவசியமானதெனக் கருதுமிடத்து, வியாபார மன்றங்கள், உயர் தொழில் ஒழுங்குமைப்புகள், நாணய நிறுவனங்கள், அரசாங்க அதிகார சபைகள் மற்றும் பொதுமக்கள் என்பவற்றின் கருத்துக்களை ஆலோசித்தலும், அவற்றைக் கவனத்திலெடுத்தலும்,

மதியுரை ஆணைக்குழுவின் கடமைகளாதல் வேண்டும்.

(3) பதிவாளரானவர், மதியுரை ஆணைக்குழுவின் பதவிவழி உறுப்பினரொருவராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அதன் ஆளுநராகவும் செயலாளராகவும் பணிபுரிதலும் வேண்டும்.

(4) அமைச்சரானவர், மதியுரை ஆணைக்குழுவினது கடமைகளைப் புரிவதற்கும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்குமானவாறான சிறப்பான அல்லது பொதுவான பணிப்புரைகளை வழங்கலாம் என்பதுடன், மதியுரை ஆணைக்குழுவானது அத்தகைய பணிப்புரைகளுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

(5) (அ) ஆறும் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக மதியுரை ஆணைக் குழுவினது உறுப்பினர்களின் பதவிக்காலமானது, மூன்று ஆண்டுகளாக விருத்தல் வேண்டும் :

ஆயின், உறுப்பினர் ஒருவர் பதவி விலகினுல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டால் அல்லது வேறு வகையில் பதவியை வறிதாக்கினுல், அவ ரின் இடத்திற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், அவர் எவருக்குப் பின் வருகிருரோ அந்த உறுப்பினரது பதவிக்காலத்தின் முடிவுறுதெஞ்சி யுள்ள பாகத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(ஆ) காலங்கழிதலினுல் பதவியை வறிதாக்குகின்ற, மதியுரை ஆணைக் குழுவின் எவரேனும் உறுப்பினர், மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதி யுடையவராதல் வேண்டும்.

(6) (அ) மதியுரை ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், அமைச்ச ருக்கு முகவரியிட்ட கடிதமூலம் பதவியிலிருந்து விலகலாம்.

(ஆ) மதியுரை ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் நல் நடத்தை யுடனிருக்கும்போது பதவி வகிக்கலாம் என்பதுடன் அமைச்சரினுல் பதவி யிலிருந்து அகற்றவும்படலாம்.

(இ) உறுப்பினரொருவர் சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல் லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக அவரது பதவிக்குரிய கடமைகளைத்தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருக்கு மிடத்து, அமைச்சரானவர் அவரின் இடத்துக்கு உறுப்பினரொருவராகச் செயலாற்றுவதற்கென வேறு ஆள் ஒருவரை நியமிக்கலாம்.

(7) மதியுரை ஆணைக்குழுவானது அமைச்சரின் அங்கீகாரத்துடன் இப் பாகத்தின்கீழ் மதியுரை ஆணைக்குழுவுக்கு அதன் கடமைகளைக் கொண்டு நடாத்துவதில் உதவுவதற்காக அத்தகைய அலுவலர்களையும் சேவையா ளர்களையும் நியமிக்கலாம்.

(8) மதியுரை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், அதன் செயலாளர் மற் றும் பிற அலுவலர்களும் சேவையாளர்களும் என்போருக்கு அமைச்சரி னுல் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய ஊதியம், அந்நோக்கத்துக்கென பாராளுமன்றத்தால் ஒதுக்கப்பட்ட பணங்களி லிருந்து செலுத்தப்படலாம்.

45. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினு லன்றி— பொருள் கோடல்.

"தோதான மாவட்ட நீதிமன்றம்" என்பது பிரதான வியாபாரத் தல மானது எந்த மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அந்த மாவட்ட நீதிமன்றம் என்று பொருளா கும் ;

"வியாபாரம்" என்பது ஏதேனும் வர்த்தகத்தை அல்லது உயர் தொழிலை உள்ளடக்கும் ;

" வியாபாரப் பெயர் " என்பது எப்பெயரின் அல்லது மருடப் பெயரின்கீழ் ஏதேனும் வியாபாரமானது பங்குடைமையில் அல்லது பிறவகையில் கொண்டு நடாத்தப்படுகிறதோ அப்பெயர் அல்லது மருடப் பெயர் எனப் பொருள்படும் என்பதுடன் ஒரு விலாசத்தினையும் உள்ளடக்கும் ;

" கூட்டுத்தாபனம் " என்பது எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு எனப் பொருள்படும் என்பதுடன் கம்பெனிகள் தொடர்பிலான சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளவாறன கம்பனி ஒன்றையும் உள்ளடக்கும் ;

" பணிப்பாளர் " மற்றும் " செயலாளர் " என்பன எப்பெயர்கொண்டு அழைக்கப்பட்டாலும் பணிப்பாளர் அல்லது செயலாளர் எனும் பதவியைக் கொண்டுள்ள ஆள் எவரையும் உள்ளடக்கும் ;

"குழுமம்" என்பது, இலாபத்துக்காக வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும் கருத்துடன் ஒருவரோடொருவர் பங்குடைமையில் ஈடுபட்டுள்ளவரான, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனியாட்களை அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தனியாட்களை அத்துடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டுத்தாபனங்களை அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டுத்தாபனங்களைக் கொண்டுள்ள ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுமம் என்று பொருள்படும் ;

" முழுப்பெயர் " என்பது எச்சந்தருப்பத்தில் ஒரு முதற்பெயர் அல்லது பிற இறுதிப் பெயர் முழுமையாகக் காணப்படுகிறதோ அத்துடன் எச்சந்தருப்பத்தில் முற்போந்த பெயர்கள் ஒன்றில் முழுமையாக அல்லது முதலெழுத்துக்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றனவோ அச்சந்தருப்பத்தையும் உள்ளடக்கும் ;

" தனியாள் " என்பது ஓர் இயற்கையான ஆள் எனப்பொருள்படும் என்பதுடன் கூட்டுத்தாபனமொன்றை உள்ளடக்காது ;

" ஆள் " என்பது கூட்டுத்தாபனமொன்றை உள்ளடக்கும் ;

" விதித்துரைக்கப்பட்ட " என்பது இச்சட்டத்தினைப் பின்பற்றி ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டது என்று பொருள்படும் ;

" பதிவாளர் " என்பது வியாபாரப் பெயர்களின் பதிவாளர் என்று பொருள்படும் என்பதுடன் ஒரு மேலதிகப் பதிவாளரையும் ஒரு உதவிப் பதிவாளரையும் அல்லது அத்தகைய ஏதேனும் தரத்தில் செயலாற்றுகின்ற எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்.

நீக்கஞ் செய்த லும் பேணல் களும்.

46. (1) (149 ஆம் அத்தியாயமான) வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டமானது இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

(2) மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் நீக்கஞ் செய்தலானது எப்படியிருப்பினும்—

(அ) அதற்கான 9 ஆம் பிரிவின் கருத்திற்குள், தவணை தவறுபவர்கள் அப்பிரிவினால் விதிக்கப்பட்ட தகுதியீனத்துக்கு, தொடர்ந்து அமைவாதலும் அப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிவாரணத்திற்கு தொடர்ந்து உரிமையுடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) நீங்கஞ் செய்யப்பட்ட கட்டளைச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட எல்லாப் பதிவுச் சான்றிதழ்களும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் புதிய பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்படும் வரை செல்லுபடியானவையாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் பயனுடையனவாகவிருத்தலும் வேண்டும் ;

(இ) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து வலுவுடையதாக இருக்கின்ற அதன் கீழ் ஆக்கப்பட்ட விதி அல்லது கட்டளை ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அத்தகைய விதி அல்லது கட்டளை ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒன்ருகக் கருதப்படவேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி மூலம் அவை திருத்தப்படலாம் அல்லது நீக்கஞ்செய்யப்படலாம் ;

(ஈ) நீக்கஞ்செய்யப்பட்ட கட்டளைச்சட்டத்தின்கீழ் கொடுத்துதவப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட விபரங்களைக் கொண்டுள்ள எழுத்திலான கூற்று ஒவ்வொன்றும், அல்லது நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாக, நீக்கஞ்செய்யப்பட்ட கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவாளருக்குச் செய்யப்பட்ட எவையேனும் விபரங்களில் மாற்றம் எதுவும் செல்லுபடியுடையதாதலும் பயனுடையதாதலும் வேண்டும், அத்துடன் விபரங்களைக் கொடுத்துதவுதல், விபரங்களை மாற்றுதல், விதித்துரைக்கப்பட்ட கட்டளைகளைக் கொடுத்தல், சான்றிதழ்களைப் பதிவுசெய்தல், சான்றிதழ்களை வழங்குதல் என்பன தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய கூற்று ஒவ்வொன்றுக்கும் அதற்கிணங்க ஏற்புடையதாதல் வேண்டும் ;

(உ) நீக்கஞ் செய்யப்பட்ட கட்டளைச்சட்டத்தின் கீழ் வைத்திருக்கப்படும் ஏதேனும் இடாப்பு, சுட்டி, அல்லது ஆவணம் இச்சட்டத்தின்கீழ் வைத்திருக்கப்படும் இடாப்பு, சுட்டி அல்லது ஆவணமாக கருதப்படுதலும் அவற்றின் பாகமாக இருத்தலும் வேண்டும் ;

(ஊ) நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய தேதியன்று நீக்கஞ்செய்யப்பட்ட கட்டளைச்சட்டத்தின்கீழ் ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுருதிருக்கும் எல்லா வழக்கு நடபடிகளும் நீக்கஞ்செய்யப்பட்ட கட்டளைச் சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ் விசாரிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.